தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

18.10.2013

**ராபி பருவ கோதுமை, கடலை, கடுகுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வு**

வரும் ராபி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் கோதுமை, கடலை, கடுகு ஆகியவற்றுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்தது. இவை தவிர, மேலும் சில துறைகள் சார்ந்த பணிகளுக்கும் அமைச்சரவை அனுமதி அளித்தது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் தில்லியில் பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வேளாண் பொருள்கள் விலை நிர்ணயக் குழு அளித்த பரிந்துரையை ஏற்று எதிர்வரும் ராபி பருவத்தில் (நவம்பர் முதல் ஏப்ரல்) சாகுபடி செய்யப்பட்டு 2014-15 நிதியாண்டில் (ஏப்ரல்-மார்ச்) அறுவடை முடிந்து விற்பனைக்காக வரும் கோதுமையின் குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ரூ.50 உயர்த்தி ரூ.1,400 என நிர்ணயிக்க அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்தது.

கடலை விலையை குவிண்டாலுக்கு ரூ. 100 உயர்த்தி, ரூ. 3,100 எனவும் கடகு விலையை குவிண்டாலுக்கு ரூ. 50 உயர்த்தி, ரூ. 3,100 எனவும் நிர்ணயிக்க அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்தது. கடலை, கடகு ஆகியவை அடுத்த நிதியாண்டு (2014-15) விற்பனைக்குத் தயாராகும்.

முன்னதாக, கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை ரூ. 100 உயர்த்தலாம் என்று வேளாண் துறை யோசனை கூறியிருந்தது. ஆனால்,

வேளாண் பொருள்களுக்கான விலை நிர்ணயக் குழு ரூ. 50 உயர்த்தலாம் என்று பரிந்துரை செய்தது. அதன் அடிப்படையில் கோதுமைக்கான விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மத்திய உணவுத் துறை இணை அமைச்சர் கே.வி. தாமஸிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு, "பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில், உணவு தானியங்களை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

கோதுமை பயிர்கள் வழக்கமாக அக்டோபரில் நடப்பட்டு ஏப்ரல் முதல் அறுவடைக்குத் தயாராக இருக்கும். குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்படுவதால் விவசாயிகளுக்கு பலன் கிடைக்கும். இதற்கிடையே, கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்களை பயனாளிகளுக்கு வழங்குவதற்காக தொடங்கப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்புத் திட்டத்துக்காக மத்திய அரசு வரும் நிதியாண்டில் கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டிய நிலை ஏற்படும். இது பணவீக்கம் உயர்வதற்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மழையால் நெல் விலை சரிவு**

திருநெல்வேலி மாவட்டத்தில் திடீர் மழையால் நெல் விலை சரிந்து, விவசாயிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தாமிரவருணி பாசனத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் 7 கால்வாய்கள் மூலம் 40,000 ஏக்கர் நிலங்களிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் 4 கால்வாய்கள் மூலம் 46,107 ஏக்கர் நிலங்களிலும் கார் பருவ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது தவிர மணிமுத்தாறு பெருங்கால் மதகு மூலம் 2586 ஏக்கர் நிலங்களிலும், கடனாநதி, ராமநதி அணைகளில் சுமார் 15,000 ஏக்கர் நிலங்களிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அம்பை 16, அம்பை 36, ஆடுதுறை 45, ஐ.ஆர்.50, சங்கமம், ஆந்திரப் பொன்னி, கோ 5555, டீலக்ஸ் பொன்னி போன்ற நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

வழக்கமாக கார் பருவ சாகுபடி பணிகளை விவசாயிகள் மே மாதம் இறுதியில் தொடங்கி, ஜூன் முதல் வாரத்தில் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதும் நடவு செய்யும் பணியில் ஈடுபடுவார்கள். 110 நாள், 120

நாள் பருவமுள்ள நெற்பயிரை சாகுபடி செய்வதன்மூலம் செப்டம்பர் மாத இறுதியில் அல்லது அக்டோபர் முதல் வாரத்தில் அறுவடை செய்யலாம்.

கடந்த சில ஆண்டுகளாக பருவமழை உரிய நேரத்தில் பெய்யாத காரணத்தாலும், அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லாததாலும் கார் பருவ சாகுபடிக்கு உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்படுவதில்லை. தாமதமாக தண்ணீர் திறக்கப்படுவதால் சாகுபடி காலமும் தள்ளிப்போகிறது.

இதன் விளைவாக பிசான பருவ சாகுபடி பணிகளைத் தொடங்க வேண்டிய பருவத்தில் கார் சாகுபடி அறுவடை முடியாத நிலை காணப்படுகிறது.

நீரில் மூழ்கிய நெற்பயிர்கள்: தற்போது அறுவடை நடைபெற்றுவரும் நிலையில், திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. இப்பாசனத்தில் 40 சதவிகிதம் அறுவடை முடிந்துள்ளது. இன்னும் ஒரு வாரத்தில் அறுவடை முழுமையாக முடியும் சூழல் உள்ளது. இந்நிலையில் இப்போது பெய்துவரும் மழையால், பல இடங்களில் அறுவடைப் பருவத்தில் உள்ள நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

அம்பாசமுத்திரம் அருகே பிரம்மதேசம், காக்கநல்லூர், கௌதமபுரி, மன்னார்கோவில் மற்றும் சேரன்மகாதேவி, பத்தமடை, கோபாலசமுத்திரம் பகுதியில் அறுவடை செய்யும் பருவத்தில் சுமார் 1,000 ஏக்கரில் நெற்பயிர் நீரில் மூழ்கி காணப்படுகிறது. வயலில் தேங்கியிருக்கும் மழைநீரை வடியவைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

நெல் கொள்முதல் விலை சரிவு: 10 தினங்களுக்கு முன்னர் அறுவடை தொடங்கியபோது, 150 கிலோவுக்கு ரூ.2,000 முதல் ரூ.2,200 வரை கொள்முதல் செய்யப்பட்டது. இப்போது மழையால் நெல் விலை ரூ.500 குறைந்து ரூ.1,700-க்குதான் கொள்முதல் செய்யப்படுகிறது. அதுவும் ஈரமில்லாத நெல்லுக்கு மட்டுமே இந்த விலை தர முடியும் என வியாபாரிகள் கட்டுபாடு விதிக்கின்றனர்.

இதனால் விவசாயிகள் செலவு செய்த தொகையாவது கிடைத்தால்போதும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு, குறைந்த விலைக்கு நெல்லை விற்று வருகின்றனர்.

ஒரு ஏக்கரில் விவசாயம் செய்ய ரூ.22,000 வரை செலவு ஆகிறது. நெல் கிலோவுக்கு ரூ.2,200-க்கு விற்பனை செய்தால், ஒன்றரை மேனி நெல் கிடைத்த இப்பருவத்தில் பெரிய அளவில் லாபம் கிடைக்காவிட்டாலும் நஷ்டம் ஏற்படாது. ஆனால், மழையால் நெல் விலை சரிந்துள்ளதால், விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

புதுக்கோட்டையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், மாவட்டத்தில் 8 இடங்களில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கோரிக்கைகள்: பயிர் காப்பீட்டு பிரிமியம் செலுத்திய அனைத்து விவசாயிகளுக்கும் காப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும். தாமதமின்றி பயிர்க்கடன் வழங்க வேண்டும். ஏரி, குளங்களை தூர்வாரி நீராதாரத்தைப் பாதுகாக்க வேண்டும். அனைத்து ஊராட்சியிலும் தேசிய வேலைஉறுதித் திட்டத்தில் வேலை நடப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

வேலையின் அளவை 23 சதுர அடியாகக் குறைக்க வேண்டும். கோயில், மடம், சத்திரங்களுக்குச் சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவருக்கும் பட்டா வழங்க வேண்டும். மாதத்தின் கடைசி தேதி வரை ரேஷன் கடைகளில் உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

புதுக்கோட்டையை அடுத்துள்ள நரிமேட்டில் ஏழைகளுக்கு வழங்கப்பட்ட பட்டாவுக்கான இடத்தை அளந்துகொடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க ஒன்றியச் செயலர் எம். வீரப்பன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் எஸ். பொன்னுச்சாமி தொடக்கி வைத்தார்.

மாநில துணைச் செயலர் ஜி. சுந்தரமூர்த்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றியச் செயலர் எம். ராமசாமி, நகரச் செயலர் சி. அன்புமணவாளன், சங்க நிர்வாகிகள் எம். முத்து, கணேசன், நாகராஜன் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

கீரனூர் வட்டாட்சியர் அலுவலகம் முன் ரெங்கராஜ் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் தலைவர் எம். செபஸ்தியான், திருமயத்தில் ஏ.பி. ஆறுமுகம் தலைமையில், மாவட்ட துணைத் தலைவர் கே.ஆர். சின்னையா, கறம்பக்குடியில் டி. சத்தியமூர்த்தி தலைமையில், மாவட்டச் செயலர் எஸ். பொன்னுச்சாமி, மாவட்டச் செயற்குழு உறுப்பினர் எம். உடையப்பன், ஆவுடையார்கோவிலில் அழகர் தலைமையில் ஒன்றியச் செயலர் எஸ். காசி ஆகியோர் பேசினர்.

**விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி**

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் வரும் அக். 29-ம் தேதி விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி நடைபெறுகிறது என்றார் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. வெங்கடேசன். இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், காளான் வளர்ப்பு பற்றிய இலவசப்பயிற்சி அக். 29-ம் தேதி காலை 10 மணி முதல், மாலை 3 மணி வரை நடைபெற உள்ளது. ஆர்வம் உள்ள விவசாயிகள் பயிற்சியில் பங்கேற்று பயன் பெறலாம். பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்களது பெயர் மற்றும் முகவரியை நேரில் அல்லது 04328 293592, 9787620754 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றார் அவர்.

**வெண்பன்றி வளர்க்க இலவசப் பயிற்சி**

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற உள்ள இந்த முகாமில், பன்றி வளர்ப்பின் நன்மைகள், பன்றி இனங்கள், பண்ணை அமைவிடம், பண்ணை வீடு, இனப்பெருக்கம், சினைப்பன்றி பராமரிப்பு, பன்றி குட்டிகள் பராமரிப்பு, தீவன மேலாண்மை, நோய் பிரச்னைகள் மற்றும் நோய்த் தடுப்பு  முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் பங்கேற்று பயன் பெறலாம்.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் 23-ஆம் தேதிக்குள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04286 - 266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பெறலாம் என வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அக்.25-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற 25-ஆம் தேதி நடைபெறுகிறது என மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற 25-ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று, தங்களது குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளளாம் என்றார் ஆட்சியர்.

**"நீர்சேமிப்பு தொழில்நுட்ப முறையை விவசாயிகளுக்கு கொண்டுசேர்க்க வேண்டும்'**

விவசாயிகளுக்கு நீர்சேமிப்பு தொழில்நுட்ப முறையைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்தார்.

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நெல்லில் சொட்டுநீர் உரப்பாசனம் குறித்த சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கு வியாழக்கிழமை தொடங்கியது. இதில், பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு.ராமசாமி பேசியது:

சொட்டுநீர்ப் பாசன முறை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்துடன் அளிக்கப்படுகிறது. சொட்டுநீர்ப் பாசன முறையைச்

செயல்படுத்தும் அதே வேளையில், களை மேலாண்மையை எதிர்கொள்வதில் விவசாயிகளுக்கு சவால் உடையதாக உள்ளது.

அதனடிப்படையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நவீனமாக்கப்பட்ட பயிர் தொழில்நுட்ப முறையை பாசி பயறு, உளுந்து பருப்பு மற்றும் பருத்தி சாகுபடியில் புகுத்தியது.

அந்தவகையில் தற்போது நெல்லில் சொட்டுநீர் உரப்பாசன முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஊட்டச்சத்து அறிமுகம் மற்றும் நீர்மட்ட கண்காணிப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

இதுபோன்ற சொட்டுநீர் உரப்பாசன தொழில்நுட்ப முறையை அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாக வேளாண் சூழலுக்கு ஏற்ப நடைமுறை சாத்தியக் கூறுகளை ஆராய வேண்டும்.

நாட்டில் 82 சதவீத அளவுக்கு சிறு, குறு விவசாயிகள் உள்ளனர். இவர்களுக்கு வேளாண்மையில் நீர்சேமிப்பு தொழில்நுட்பத்தை ஊக்கப்படுத்த வேண்டும். இளம் தலைமுறையினர் விவசாயத் துறையில் செயல்பட ஆர்வம் காட்ட வேண்டும் என்றார்.

ஆந்திர மாநிலத்தில் உள்ள ஏ.என்.ஜி. ரங்கா வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஏ.பத்மராஜு பேசியது:

சொட்டுநீர்ப் பாசனத்தில் ஆந்திரப்பிரதேச மாநிலம் முன்னிலையில் உள்ளது. அங்கு 9 லட்சம் ஹெக்டர் பரப்பளவில் சொட்டுநீர்ப் பாசன முறையில் விவசாயம் செய்யப்படுகிறது. சொட்டுநீர்ப் பாசன முறையை ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று சேர வேண்டும் என்றார்.

ஹைதராபாத் நெல் ஆராய்ச்சி மையத்தின் திட்ட இயக்குநர் பி.சி.விரகதமத் பேசுகையில், ""ஒவ்வோர் ஆண்டும் 2 மில்லியன் டன் அதிக அரிசியை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. அடுத்த 30 ஆண்டுகளில் தண்ணீர்ப் பயன்பாடு மூன்றில் ஒரு பங்காகக் குறைந்துவிடும். எனவே, விவசாயிகளுக்கு நீர்சேமிப்புத் தொழில்நுட்பத்தைக் கொண்டு சேர்க்க வேண்டும்" என்றார்.

பல்கலைக்கழக நீரியல் தொழில்நுட்ப மையத்தின் இயக்குநர் பி.ஜே.பாண்டியன் மற்றும் இஸ்ரேல், இத்தாலி உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பங்கேற்றனர்.

**காங்கயத்தில் பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

காங்கயம் பகுதியில் புதன்கிழமை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காங்கயம் பகுதியில் கடந்த 3 ஆண்டுகளாகப் போதிய மழை இல்லை. இதனால் தென்னை மரங்கள் கடும் வறட்சியைத் தாக்கு பிடிக்க முடியாமல் முற்றிலும் கருகிபோயின. எஞ்சிய மரங்களைக் காக்க விவசாயிகள் மழை வேண்டி எதிர்பாப்புடன் காத்திருந்தனர்.

மேலும், குடி நீருக்கும் கடும் தட்டுப்பாடு நிலவி வந்தது. இதன் காரணமாக, மழை வேண்டி, பொதுமக்கள் பல்வேறு இடங்களில் சிறப்பு வழிபாடுகளும் நடத்தினர்.

இந்நிலையில், புதன்கிழமை இரவு காங்கயம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில், கடுமையான இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

இது குறித்து, விவசாயிகள் தரப்பில் கூறியதாவது: காங்கயம் பகுதியில் கடந்த 3 ஆண்டுகளாகப் போதிய மழை இல்லை. இதனால் விவசாயம் செய்ய முடியாமல் இருந்தோம்.

தற்போது கீழ்பவானி வாய்க்காலில் நன்செய் பயிருக்குத் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. போதிய மழை இல்லாமல் விவசாயிகள் நாற்று நடவு செய்வதை காலம் தாழ்த்தி வந்தனர். தற்போது மழை நன்றாகப் பெய்துள்ளது. அதனால் இனி விரைவாக நாற்று நடும் பணியை மேற்கொள்ள முடியும்.

இந்த மழைக் காரணமாக ஏரி, குளங்களுக்கும் மழை நீர் வந்துள்ளது. சிறிய ஓடைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் கருகும் பயிர்களைக் காக்க முடியும் என்றனர்.

இந்த கனமழை காரணமாக வறண்டு கிடந்த வீட்டுக் கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பவானிசாகர் அணையில் இருந்து ஒரே நேரத்தில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும்**

பவானிசாகர் அணையில் இருந்து ஒரே நேரத்தில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் செ.நல்லசாமி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பவானிசாகர் அணை, கீழ்பவானி வாய்க்கால் மூலமாக 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. கொடிவேரி பாசனம் மூலமாக 20 ஆயிரத்து 504 ஏக்கர்களும், காலிங்கராயன் பாசனம் மூலமாக 15,734 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெற்று வருகின்றன.

இந்தப் பாசனங்களுக்கு பவானிசாகர் அணையிலிருந்து வெவ்வேறு தேதிகளில் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதனால் பெரிய பாசனமான கீழ்பவானி பாசனம் பாதிக்கப்பட்டு வருகிறது. காவிரி இறுதித் தீர்ப்பின்படி, கொடிவேரி பாசனத்திற்கு 4.65 டி.எம்.சி. தண்ணீரும், கீழ்பவானி பாசனத்திற்கு 27.95 டி.எம்.சி. தண்ணீரும், காலிங்கராயன் பாசனத்திற்கு 3.98 டி.எம்.சி. தண்ணீரும் திறந்துவிட வேண்டும். இந்த விகிதாசார அடிப்படையில் தண்ணீரை அணையில் இருந்து திறக்க வேண்டும்.

நீர் கூடுதலாக வரும்போது, விகிதாசார அடிப்படையில் நீரின் அளவைக் கூட்டி வழங்க வேண்டும். நீர் குறைவாக வரும்போது நீரை விகிதாசார அடிப்படையில் குறைத்து வழங்க வேண்டும்.

பவானிசாகர் அணையில் இருந்து ஒரே நேரத்தில் அனைத்துப் பாசனத்திற்கும் தண்ணீர் திறப்பதன் மூலமாக சமச்சீர் நீர் நிர்வாகம் சாத்தியமாகும். எனவே, இனி வரும் காலங்களில் காவிரி இறுதித் தீர்ப்பின் படி, சமச்சீர் நீர் நிர்வாகம் மேற்கொள்ளவேண்டும்.

**பரப்பலாறு அணைக்கு நீர்வரத்து துவக்கம்**

புதன்கிழமை பெய்த கன மழையால், ஒட்டன்சத்திரம் அருகே உள்ள பரப்பலாறு அணைக்கு, ஒரே நாளில் 28 அடி வரை நீர்வரத்து வந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் மேற்குத் தொடர்ச்சி மலையில் இரு மலைகளுக்கு இடையே அமைந்துள்ளது பரப்பலாறு அணை. இந்த அணை, ஒட்டன்சத்திரத்தில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. பாச்சலூர் மலைப் பகுதியில் பரப்பலாறு நதியாகத் தோன்றி, விருப்பாச்சி, தாழையூத்துக்கு கீழாக அது நங்காஞ்சி ஆறு என்ற பெயருடன் பாய்கிறது.

கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், அணை வறண்டுவிட்டது. இதனால், குடிநீருக்குக் கூட பொதுமக்கள் அவதிப்பட்டு வந்தனர். இந்த நிலையில், புதன்கிழமை இரவு சுமார் 2 மணி நேரம் அணைப் பகுதியில் கனமழை பெய்தது. எனவே, அணைக்கு ஒரே நாளில் சுமார் 28 அடிக்கு தண்ணீர் வரத் தொடங்கியது.

வடகிழக்குப் பருவமழை இன்னும் தொடங்காத நிலையில், வெப்ப சலத்தனால் இப்பகுதியில் மழை பெய்து வருகிறது. இருப்பினும், பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்த அணை, டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் முழுக் கொள்ளளவான 90 அடியை எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது திறந்து விடப்படும் நீரானது, முத்துபூபாலசமுத்திரம், சடையன்குளம், ராமச்சமுத்திரக்குளம், பெருமாள்குளம், செங்குளம், ஜவ்வாதுபட்டி, பெரியகுளம் ஆகிய குளங்களை நிரப்பி, பின்னர் இடையகோட்டையில் உள்ள நங்காஞ்சி அணையை சென்றடையும்.

இந்த அணையின் மூலம், ஒட்டன்சத்திரம் பகுதியில் 2,323 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. அதேபோல், கரூர் மாவட்டத்தில் சுமார் 1500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

தற்போது, அணைக்கு விநாடிக்கு சுமார் 15 கனஅடி வீதம் தண்ணீர் வரத்து உள்ளதாக, பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

விருதுநகர் மாவட்டத்தை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்கக் கோரி ராஜபாளையத்தில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் புதன்கிழமை மாலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வறட்சியால் பட்டுப்போன தென்னைக்கு ஏக்கருக்கு ரூ.1 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மற்ற பயிர்களுக்கும் உரிய இழப்பீடு வழங்க வேண்டும், தென்னை சாகுபடிக்கு உரிய இன்சூரன்ஸ் வசதி, பயிர் இழப்பீட்டுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.ஆர்ப்பாட்டத்துக்கு தமிழக விவசாயிகள் சங்க விருதுநகர் மாவட்டத் தலைவர் என்.ஏ. ராமச்சந்திர ராஜா தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் அம்மையப்பன், மாநில துணைத் தலைவர் ரகுபதிராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு கோரிக்கையை வலியுறுத்தி குரல் எழுப்பினர். ராஜபாளையம் நகரச் செயலாளர் முருகேசன் நன்றி கூறினார்.

**தமிழகத்தில் சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையின் பல பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ வெள்ளிக்கிழமை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சில இடங்களில் கன மழை பெய்யவும் வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டமாக காணப்படும். மாலை அல்லது இரவில் மழை பெய்யும்.

இந்த நிலையில் வியாழக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் தாராபுரம், வாடிபட்டி ஆகிய பகுதிகளில் 130 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): பவானிசாகர், சோழவரம் - 120, அன்னூர், அவினாசி, கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், திருமங்கலம் - 90, காங்கேயம் - 80, ஆண்டிப்பட்டி, மேட்டுப்பாளையம், ராசிபுரம், விளாத்திக்குளம், பெரியகுளம் - 70, ஊட்டி, உசிலம்பட்டி, இளையாங்குடி, நிலக்கோட்டை, மதுரை, சிவகாசி - 60, ஆத்தூர், மணிமுத்தாறு, சிவகிரி, ராஜபாளையம், பரமக்குடி, வால்பாறை, கோத்தகிரி, சாத்தூர், ஒரத்தநாடு - 50, விருதுநகர், குமாரபாளையம், குன்னூர், பழனி, சிவகங்கை - 40, கிருஷ்ணகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை, சின்னக்கல்லாறு, பேச்சிப்பாறை, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், கோவை - 30, துறையூர், சங்கரன்கோயில், கரூர் பரமததி, திருப்பூர், ஒகேனக்கல், கொடைக்கானல், தென்காசி, கொள்ளிடம், சேலம் - 20, பெருந்துறை, மேட்டூர், திருசெங்கோடு, நாகர்கோவில், தூத்துக்குடி, முசிறி - 10.

**தமிழகத்தில் சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையின் பல பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ இன்று பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சில இடங்களில் கன மழை பெய்யவும் வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டமாக காணப்படும். மாலை அல்லது இரவில் மழை பெய்யும்.

இந்த நிலையில் வியாழக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் தாராபுரம், வாடிபட்டி ஆகிய பகுதிகளில் 130 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): பவானிசாகர், சோழவரம் - 120, அன்னூர், அவினாசி, கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், திருமங்கலம் - 90, காங்கேயம் - 80, ஆண்டிப்பட்டி, மேட்டுப்பாளையம், ராசிபுரம், விளாத்திக்குளம், பெரியகுளம் - 70, ஊட்டி, உசிலம்பட்டி, இளையாங்குடி, நிலக்கோட்டை, மதுரை, சிவகாசி - 60, ஆத்தூர், மணிமுத்தாறு, சிவகிரி, ராஜபாளையம், பரமக்குடி, வால்பாறை, கோத்தகிரி, சாத்தூர், ஒரத்தநாடு - 50,

விருதுநகர், குமாரபாளையம், குன்னூர், பழனி, சிவகங்கை - 40, கிருஷ்ணகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை, சின்னக்கல்லாறு, பேச்சிப்பாறை, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், கோவை - 30, துறையூர், சங்கரன்கோயில், கரூர் பரமததி, திருப்பூர், ஒகேனக்கல், கொடைக்கானல், தென்காசி, கொள்ளிடம், சேலம் - 20, பெருந்துறை, மேட்டூர், திருசெங்கோடு, நாகர்கோவில், தூத்துக்குடி, முசிறி - 10.

**இயற்கையைக் காப்போம்**

அண்மையில் அடுத்தடுத்து இரு செய்திகள் நாளேடுகளில் வந்தன. ஒன்று, ஒடிஸாவை அச்சுறுத்திய "பாய்லின்' புயல், கரையைக் கடந்த போது பல ஊர்கள் சீர்குலைந்தாலும், மக்களுக்கு புயல் எச்சரிக்கைகள் சரியான நேரத்தில் கொடுக்கப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகள் சரியான முறையில் எடுக்கப்பட்டதால், உயிர்ச்சேதம் பெருமளவில் தவிர்க்கப்பட்ட செய்தி.

அடுத்த செய்தி; மத்தியப் பிரதேசத்தில் ஒரு கோயில் வழிபாட்டுக்குச் சென்றவர்கள், வதந்தி காரணமாக முண்டியடித்துக் கொண்டு சென்றதால் பாலத்தில் ஏற்பட்ட விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்து விட்டனர். முன்னது இயற்கைப் பேரழிவு. பின்னது மனிதச் சீரழிவு. இந்த இரண்டு செய்திகளும் எதைக் காட்டுகின்றன?

அறிவியலின் துணையால் இயற்கை விளைவிக்கும் பேரழிவிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றுள்ளோம். அதே சமயத்தில், அச்சத்தாலும், அறியாமையாலும், வழிதவறி நம்மை நாம் காத்துக் கொள்ள வழியின்றியிருக்கிறோம். இயற்கையை பெருமளவு அறிவியலால் வென்றுவிட்டோம்; ஆனால் மனித இயற்கையை, அதன் சில அடிப்படைக் குறைகளை, ஆசைகளையும், அச்சங்களையும் இன்னும் வெல்லவில்லை. இதனால் வழிபாடு தவறு என்பது அர்த்தமில்லை. விபத்து நேர்ந்ததற்கு வழிபாட்டுணர்வு காரணமல்ல. அதைச் செய்வதற்கு சரியான வழிமுறைகளை வகுத்துச் செயல்படாததுதான் காரணம்.

இயற்கைப் பேரழிவுகளிலிருந்து காத்துக் கொள்ளக் கற்றுக் கொண்ட நாம், மனிதக் குறைபாடுகளால் ஏற்படும் சீரழிவுகளிலிருந்து காத்துக் கொள்ள முடியாமைக்குக் காரணம் ஆசையும் அச்சமும் அறியாமையும்தான். தேவைகளை நிறைவேற்ற விரும்புவது தவறில்லை. நம்முடைய ஆசைகளுக்கும் தேவைகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை உணராததே இன்றைய வாழ்வின் சிக்கல்.

மகாத்மா காந்தியும், "இந்த பூமியில் நம் எல்லாரது தேவைகளையும் பூர்த்தி செய்யப் போதுமான வளங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு தனிமனிதனின் பேராசையை நிறைவேற்ற அதனால் முடியாது'. இப்படிப்பட்ட பேராசைதான், இயற்கைச் சூழல் கெட்டதற்கும் அதன் வளங்கள் வற்றியதற்கும், இயற்கைப் பேரழிவுகளுக்கும் காரணமாக உள்ளது என்பது கசப்பான உண்மையாகும்.

ஆசையும், அச்சமும்தான் மனித வரலாற்றில் நிகழ்ந்த நிகழும் கொலைகளுக்கும், கொள்ளைகளுக்கும், போர்களுக்கும் காரணங்கள். இவைகள் எல்லாம் மனிதன் மனிதனோடு மோதியதால் விளைந்த அழிவுகள். ஆனால் இவற்றையெல்லாம் மிஞ்சும் வகையில் ஒரு பேரழிவு பிரபஞ்சத்தை மிரட்டிக் கொண்டிருக்கிறது. அது மனிதர்கள் இயற்கையோடு இயைந்து வாழாமல், இயற்கையை மாசுபடுத்தியதால் ஏற்படும் பருவநிலை மாற்றங்களும், புவி வெப்பமயமாவதுமே.
தொழிற்சாலைகளை உருவாக்க இயற்கையின் எழிற்சோலைகளை மனிதன் அழிப்பதால் நல்ல காற்றும், குடிநீரும் குறைந்து போய்விட்டன.

இயற்கை மனித உலகின் அங்கமல்ல. மனிதன்தான் இயற்கையின் அங்கம். இதை உணராமல், இயற்கையை நாம் அழிப்பது, நம் தாயையே அழிப்பதாகும்.

தொழிற்சாலைகளிலிருந்தும் எரிபொருள் பயன்பாட்டிலும் வரும் கரியமில வாயு, வான்மண்டலத்தைத் தாக்குவதால், புவி வெப்பம் கூடிக்கொண்டே போகிறது. கடல் நீர் மட்டம் உயர்ந்து கொண்டே போகிறது.

இவற்றைக் கட்டுப்படுத்தாவிட்டால், நீருக்காகவும் நிலத்துக்காகவும், காற்றுக்காகவும் மனிதன் கடுமையாகப் போராட வேண்டியிருக்கும். இது உலகளாவிய சமூகப் பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு மனித குலத்தின் பாதுகாப்புக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமைந்துவிடும்.

பொருளாதாரம் உலகமயமானதுபோல், இயற்கை ஆதாரங்களைப் பாதுகாப்பதும் உலகப் பிரச்னையாகிவிட்டது. இதனை மூன்றாம் உலகப் போர் என்றும் கூறுகிறார்கள். இந்தப் பேரழிவைத் தடுக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

பிரிட்டிஷ் அயல்நாட்டுச் செயலர் மார்கரெட் பெக்கர், 2007-இல் கூறியது: "பருவ நிலைப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வருவது வெளியிலிருந்து இல்லை; நமக்குள்ளிருந்தே. நாம் அனைவருமே நம் பகைவர்களாகி விட்டோம்.

இது பாதிப்பது எந்த ஒரு தனி நாட்டையும் அல்ல; எல்லா நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பையே. இதற்காக தொழில் வளர்ச்சியைக் குறைக்க வேண்டும் என்பதல்ல. அது வளரும் நாடுகளுக்கு ஏற்புடையதல்ல. ஆனால், குறைந்தளவே கார்பனை வெளியேற்றும் முறைகளைக் கையாள வேண்டும்'.

முடிவாக, இயற்கைப் பேரழிவுகளுக்கும் மனிதச் சீரழிவுகளுக்கும் தொடர்பு இருக்கிறது. அவற்றை நாம் கட்டுப்படுத்துவதோடு அவை வராமலிருக்க, நம் உற்பத்தி முறைகளையும், வாழ்க்கை முறைகளையும் மாற்றிக் கொள்ள வேண்டும்.

இயற்கையோடு இணைந்து இயற்கையான வாழ்க்கை வாழ்ந்தால் இயற்கைப் பேரழிவுகளிலிருந்து மட்டுமின்றி, மனிதச் சீரழிவுகளிலிருந்தும் நம்மைக் காத்துக் கொள்ளலாம். இயற்கையை நாம் பாதுகாத்தால் இயற்கை நம்மை பாதுகாக்கும்.

**கிருஷ்ணகிரியில் 35 மி.மீ. மழை**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதன்கிழமை இரவு முதல் வியாழக்கிழமை காலை 8 மணி வரை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

கிருஷ்ணகிரியில் அதிகபட்சமாக 35.2 மி.மீ. மழை பதிவானது. பலத்த மழையால் கிருஷ்ணகிரி நகரில் மின் விநியோகம் பாதிக்கப்பட்டது. சாலைகளில் மழைநீர் தேங்கியது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8 மணி வரை பதிவான மழை அளவு (மி.மீ.):

பர்கூர் 1.6, தேன்கனிக்கோட்டை 12, கிருஷ்ணகிரி 35.2, அஞ்செட்டி 6., ஊத்தங்கரை 3, சூளகிரி 2, நெடுங்கல் 2.6, ராயக்கோட்டை 3, போச்சம்பள்ளி 2.80.

**அக். 25-ல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்**

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் அக். 25-ல் (வெள்ளிக்கிழமை) நடைபெற உள்ளது. இதுகுறித்து அரியலூர் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் அக். 25-ம் தேதி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் உள்ள மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் நீர்ப்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண் இயந்திரங்கள், விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும் என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"உரங்களை அதிக விலைக்கு விற்றால் நடவடிக்கை'**

தூத்துக்குடி மாவட்டத்தில் உரங்களை அதிக விலைக்கு விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) செ.மதியழகன் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகள் எந்த இடுபொருள் வாங்கினாலும், விற்பனை நிலையத்தில் விற்பனைக்கான ரசீது கேட்டு வாங்க வேண்டும்.

எல்லா உரங்களிலும் வெவ்வேறு நிறுவனங்கள் தயாரித்தாலும் அதில் இருக்கும் சத்துக்கள் மாறாது. குறிப்பாக யூரியாவை எடுத்துக் கொண்டால் எந்த நிறுவனம் தயாரித்தாலும் அதில் தழைச்சத்து 46 சதவிகிதம்தான் இருக்கும். எனவே விவசாயிகள் குறிப்பிட்ட நிறுவன உரங்கள் தான் வேண்டும் என எண்ண

வேண்டாம். உரம் சம்பந்தமான பிரச்னை இருந்தால் 94436 56811 என்ற கைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

உர விற்பனையாளர்கள் உரங்கள் கொள்முதல் ரசீதை விற்பனை நிலையத்தில் பராமரிக்க வேண்டும். முறையான பதிவேடு , விற்பனை ரசீது பராமரிக்க வேண்டும். விற்பனை ரசீதில் விவசாயிகளின் முகவரியிட்டு கையொப்பம் வாங்க வேண்டும்.

அரசு அங்கீகாரம் இல்லாத உர உற்பத்தியாளர்களிடம் உரம் வாங்கி விற்பனை செய்யக்கூடாது. உரம் விற்பனை சம்பந்தமான விலைப் பட்டியல் விவசாயிகளுக்கு தெரியும்படி பராமரிக்க வேண்டும். மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை வாங்கி கொடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குமரி மாவட்டத்தில் பரவலாக மழை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் வியாழக்கிழமை அதிகாலை பரவலாக மழை பெய்தது.

கடந்த சில நாள்களாக மாவட்ட மக்களை வெயில் வாட்டியது. அக். 15-ஆம் தேதிக்கு பிறகு, வடகிழக்கு பருவமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது. இந்நிலையில் புதன்கிழமை இரவு முதல் வியாழக்கிழமை அதிகாலை வரை மாவட்டத்தில் பரவ

லாக மழை பெய்தது. மாவட்டத்தில் புத்தன் அணையில் அதிகபட்சமாக 38 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. பேச்சிப்பாறையில் 30 மி.மீ., பெருஞ்சாணியில் 37 மி.மீ., சிற்றாறு 1.16 மி.மீ., குருந்தன்கோடு 3.8 மி.மீ., ஆணைக்கிடங்கு 15 மி.மீ., நாகர்கோவில் 11.2 மி.மீ., பூதப்பாண்டி 5 மி.மீ., சுருளோடு 21 மி.மீ., கன்னிமார் 15.2 மி.மீ., மயிலாடி 14.2 மி.மீ., மழையும் பதிவாகி இருந்தது.

பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 501 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 198 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.10.2013**

## காலிபிளவர், முருங்கை விலை உயர்வு

ஒட்டன்சத்திரம் : வரத்து குறைவாக உள்ளதால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் ஒரு காலிபிளவர் ரூ.15 க்கு விற்றது.

ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு சுற்றியுள்ள கிராமப்பகுதிகள் மற்றும் அருகில் உள்ள மாவட்டங்களில் விளையும் காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. மழையின்மை காரணமாக மார்க்கெட்டில் காய்கறிகளின் வரத்து குறைவாகவே காணப்பட்டது.

இதன் காரணமாக காலிபிளவர், முருங்கை ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது.

கம்பிளிநாயக்கன்பட்டியைச் சேர்ந்த விவசாயி ராமசாமி கூறுகையில்;

""ஒன்றே முக்கால் ஏக்கரில் காலிபிளவர் நடவு செய்துள்ளேன். தினமும் 70 முதல் 60 மூடைகள்(ஒரு மூடையில் 20 பூக்கள் இருக்கும்) கொண்டு செல்கிறேன், ஒரு மூடை ரூ.270 முதல் ரூ.300 வரை விற்கிறது. வாரத்திற்கு ஒரு முறை பூச்சி மருந்து அடிக்க வேண்டி உள்ளதால் இந்த விலை கட்டுபடியாகாது,'' என்றார்.

முருங்கைக்காய் விலையும் ஏறுமுகமாகவே காணப்படுகிறது. ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.47 க்கு விற்றது.

## விவசாய வேலைக்கு ஆட்கள்...தட்டுப்பாடு 5000 ஏக்கர் தரிசாக மாறின

போடி :விவசாய வேலைகளுக்கான தொழிலாளர்கள் கேரள ஏலத் தோட்டங்களுக்கு செல்வதால், தேனி மாவட்டத்தில் விவசாய வேலைக்கு ஆட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் 5000 ஏக்கருக்கும் மேல் விளை நிலங்கள் தரிசாக மாறியுள்ளன.

விவசாய தொழிலாளர்களுக்கு தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தை

மத்திய அரசு செயல்படுத்துகிறது. விவசாயத் தொழில் இல்லாத காலங்களில் விவசாய தொழிலாளர்களை கொண்டு கிராமங்களில் தார்ரோடு அமைத்தல், நீர் நிலைகளை உருவாக்குவதல் போன்ற பணிகள் நடக்கிறது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சிகளின் நேரடி மேற்பார்வையில் பணிகள் நடக்கிறது.

திட்டத்தை முறைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பினும் பணிகள் நடந்து வருகின்றன. ஆண், பெண் பாகுபாடின்றி அனைவருக்கும் தினசரி கூலியாக 148 ரூபாய் வரை கிடைக்கிறது.

கேரள ஏலத்தோட்டங்களில் போடி, தேவாரம், கம்பம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள் இருக்கும் இடம் தேடி நேரடியாக வந்து ஜீப்பில் அழைத்து செல்வதோடு, திரும்பவும் வீட்டில் கொண்டு வந்து விடுகின்றனர்.

இவர்களுக்கு, சம்பளமாக 200 முதல் 250 ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

இதனால், தேனி மாவட்டத்தில் களை எடுத்தல், உரமிடுதல், தண்ணீர் பாய்ச்சுதல், விளைந்த பொருட்களை எடுத்தல், போன்ற பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது. விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ள விவசாயிகள் கூலியாக 200 ரூபாய் வரை உயர்த்தி கொடுத்தாலும், விவசாய வேலைகளுக்கு கூலித் தொழிலாளர்கள் வருவதற்கு ஆர்வம் காட்டுவதில்லை.

கேரளாவில் பெண்களுக்கு 220 ரூபாய், ஆண்களுக்கு 350 ரூபாய் வரை கிடைப்பதால் இந்த பணிகளுக்கு செல்வதால் ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தேனி மாவட்டத்தில், விவசாய நிலங்களில் தண்ணீர் வசதி இருந்தும் கூலி ஆட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், 5000 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் தரிசாக கிடக்கிறது. இந்த நிலங்கள் முழுவதும் தற்போது வீடுகள் கட்டுவதற்கு பிளாட்டுகளாக மாறி வருகின்றன.

## அறுவடை தொடங்குவதால் அரிசி விலை குறைகிறது

தேனி: இன்னும் 15 நாட்களில் தமிழகம், கர்நாடகா, ஆந்திராவில் நெல் அறுவடை தொடங்குவதால், அரிசி விலை தற்போதே குறைய தொடங்கி உள்ளது. புது நெல்

வரத்து தொடங்கியதும் விலையில் மேலும் சரிவு ஏற்படும், என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு ஆண்டுகளாகவே அரிசி விலை தொடர்ந்து உயர்ந்து வந்தது. தற்போது தேனி சந்தையில், ஸ்டீம் ரைஸ் சோனா 100 கிலோ 3800 ரூபாய் ஆகவும், பழைய அரிசி 4800 ரூபாயாகவும் உள்ளது. செல்லப்பொன்னி ரூ.2900, ஒட்டுச் செல்லப்பொன்னி ரூ.2700, சி.ஆர்., இட்லி அரிசி ரூ. 2600, டீலக்ஸ் பொன்னி ரூ.4400, ராஜபோகம் அரிசி ரூ.4800 முதல் 5100 வரை விலை உள்ளது. இன்னும் 15 நாட்களில் தமிழகம், கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் நெல் அறுவடை தொடங்கி விடும். இந்த ஆண்டு நல்ல நீர் வளம் இருந்ததால், விளைச்சல் நன்றாக உள்ளது. அடுத்த சாகுபடியும் உடனே தொடங்கும் வாய்ப்புகள் உள்ளது. எனவே அறுவடையான நெல்லில் பெரும்பகுதி, விற்பனைக்கு வந்து விடும். இரண்டாம் போக சாகுபடி நெல் தான் இருப்பிற்கு செல்லும் வாய்ப்புகள் உள்ளன. தற்போது, அரிசி விற்பனை மந்த நிலையில் இருப்பதாலும், புது நெல் வரத்து உள்ளதாலும் மார்க்கெட்டில் லேசான விலை சரிவு ஏற்பட்டுள்ளதாக, வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். கர்நாடகா ஸ்டீம் ரைஸ் காவேரி சோனா 100 கிலோ மூடை 3300 ரூபாயில் இருந்து 3200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதேபோல் எல்லா ரகத்திலும் ஒரு ரூபாய் வரை குறைந்துள்ளது. புது நெல் வந்ததும், புதிய ரக அரிசி விலை அதிகமாக குறையும். ஆனால் பழைய அரிசி விலை சீராக இருக்கும், என வியாபாரிகள் தெரிவித்தனர்

## விவசாய கடன் வழங்கும் நடைமுறையில் மாற்றம்

தேனி:மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சிட்டா, அடங்கல் கொடுத்து பயிர்க்கடன் வாங்கும் முறையில் மாற்றம் கொண்டு வரும் நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளன. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள், தனியார் வங்கிகளில் பயிர்க்கடன் வழங்கப்படும் போது விவசாயிகளிடம் இருந்து சிட்டா, அடங்கல் பெறப்படுகிறது. ஒரு முறை சிட்டா, அடங்கல் கொடுக்கும் விவசாயிகள், அதனை காட்டியே தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு கடன் பெறுகின்றனர். அடுத்த பயிர்

சாகுபடிக்கு விவசாயிகள் மாறும் போது, அந்த பயிருக்கு உரிய கடன் தொகையில் இன்சூரன்ஸ் பிடித்தம் செய்வதிலும், இழப்பீடு வழங்குவதிலும் குழப்பம் ஏற்படுகிறது. எனவே,ஒவ்வொரு முறை பயிர்க்கடன் வழங்கும் போதும், சாகுபடி செய்துள்ள பயிருக்கு ஏற்ற வகையில் சிட்டா, அடங்கல் பெறவும், விவசாயிகள் கொடுத்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் சாகுபடி செய்துள்ளனரா, என வங்கி அதிகாரிகள் நேரடியாக கள ஆய்வு செய்த பின்னரே வங்கி கடன் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுக்க தடுப்பூசி

வத்தலக்குண்டு : கால்நடைத்துறை மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நோய் பரவால் தடுக்க ஊசி போடப்படுகிறது.

கடுமையான வறட்சி, கடும் வெயிலால் கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கவில்லை. பலர் கால்நடைகளை விற்று வந்தனர். இதனால் அரசு சார்பில் குறைந்த அளவு நீர் தேவைப்படும் அகத்தி கீரை கன்றுகளை கால்நடை வளர்ப்போருக்கு வழங்க உத்தரவிட்டது.

அகத்திக் கீரை கால்நடைகளுக்கு ஊட்டசத்து ஆகும். இந்நிலையில் இம்மாதத்தில் வடகிழக்கு பருவமழை துவங்க உள்ளது. ஆறு மாதங்களுக்கு மேலாக மழை இல்லாமல், திடீர் மழை பெய்தால் கால்நடைகளை நோய் தாக்கும் என்பதால், கால்நடைத்துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கிராமங்களுக்கே சென்று நோய் தடுப்பு ஊசி போடுகின்றனர்.

வத்தலக்குண்டு வட்டார கால்நடை டாக்டர் பிரபு கூறியதாவது: வட மாவட்டங்களில் சமீபத்தில் மழை பெய்ததால் நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டு, கட்டுபடுத்தப்பட்டது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காணை நோய் தாக்காமல் இருக்க தடுப்பூசி போடப்படுகிறது, என்றார்.

## பனை ஓலை பாய் விலை அதிகரிப்பு

ராமநாதபுரம்:ராமநாதபுரம் அதன் சுற்றுப்புறங்களில் தயாராகும் "பனை ஓலை பாய்' விலை ஒரு ரூபாய் அதிகரித்துள்ளது.

தீபாவளியை முன்னிட்டு ராமநாதபுரம் பனை ஓலை பாய்களுக்கு, கிராக்கி

ஏற்பட்டுள்ளது. பட்டாசு பண்டல்களை கட்டுவதற்காக, சிவகாசி பட்டாசு ஆலைகளுக்கு, அதிகளவில் அனுப்பப்படுகிறது. இதனால் ராமநாதபுரம் அருகே புதுக்கோயில், வைரவன்கோயில், உத்தரவை, தெற்குத்தரவை, உள்ளிட்ட பல கிராமங்களில் பாய் தயாரிப்பு படு "பிசி' ஆக உள்ளது. விலை உயர்வு: கடந்தாண்டு, ஒரு பாய் 4 ரூபாய் வீதம், 30 பாய் கொண்ட ஒரு கட்டு 120 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது, ஒரு ரூபாய் அதிகரித்து, பண்டல் 150 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

## விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

காளையார்கோவில் : மறவமங்கலத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில்,கடந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர்பாதுகாப்பு திட்டத்தில் இழப்பீடு வழங்குவது,நடப்பு ஆண்டு விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்ககோரி ஆர்ப்பாட்டம் நடந்தது. ஒன்றிய செயலாளர் ஜோதிநாதன் தலைமை வகித்தார்.

மாவட்ட தலைவர் அழகர்சாமி,செயலாளர் வீரபாண்டி, மார்க்சிஸ்ட் ஒன்றிய செயலாளர் திருநாவுக்கரசு,விவசாயிகள் சங்க ஒன்றியதலைவர் சலயத்துராஜ், துணைத்தலைவர் பூவன்,துணைச் செயலாளர் சகோதரன், கூத்தப்பன்,சங்கரலிங்கம் பங்கேற்றனர்.

## 1,175 டன் பட்டுக்கூடு உற்பத்தி ஈரோடு விவசாயிகள் சாதனை

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், கடந்த, 2012-13ம் ஆண்டில், 1,175 டன் பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து, விவசாயிகள் சாதனை படைத்துள்ளனர். தமிழகத்தில் உற்பத்தி செய்யும் பட்டுக்கு, வெளிமாநிலங்களில் நல்ல வரவேற்பு உள்ளதால், பட்டு உற்பத்திக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. வீரிய இன மல்பெரி நடவுக்கு மானியம் வழங்குதல், மல்பெரி தோட்டத்துக்கு சொட்டு நீர்பாசன மானிய உதவி வழங்குதல், தனி புழு வளர்ப்பு மனை அமைத்தல், புழு வளர்ப்புக்காக மானிய உதவியுடன் புழு வளர்ப்பு தளவாடங்கள் அமைத்தல்,

தனியார் சிறிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையங்கள் மானிய உதவியுடன் அமைத்தல் போன்ற நலத்திட்டங்களை விவசாயிகளுக்கு, அரசு வழங்கி வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் தீவிர மல்பெரி சாகுபடி திட்டத்தின் மூலம், 2012-13ம் ஆண்டில், 1,175 டன் பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து விவசாயிகள் சாதனை படைத்துள்ளனர்.

இதுகுறித்து பட்டுவளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில், 2000-01ம் ஆண்டில் ஜப்பான் நாட்டு நிதியுடன், ஜெய்கா திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டத்தால், மாவட்டத்தில் பட்டு உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. சில ஆண்டுக்கு முன், நூறு முட்டை தொகுதிக்கு, 40 கிலோ பட்டுக்கூடுகள் அறுவடை என்ற நிலைமாறி, இன்றைய நிலையில் சுமார், 70 கிலோ வரை அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

ஈரோடு உதவி இயக்குனர் மேற்பார்வையின் கீழ், 3,432 ஏக்கர் பரப்பில், 1,847 விவசாயிகள் பட்டு தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இதன்மூலம், 17,580 விவசாயிகள் மறைமுகமாகவும், நேரடியாகவும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். 2012-13ம் ஆண்டில், 29.50 கோடி மதிப்பில், 1,175 டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தரமான பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யவும், புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகளிடத்தில் உரிய நேரத்தில் கொண்டு செல்லவும், வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தியை அதிகரிக்கவும், மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் பட்டு வளர்ச்சி துறை உதவியுடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. பட்டு வளர்த்து லாபம் பெற விரும்பும் விவசாயிகள், 0424-2339664. 04295-245239 என்ற எண்களை தொடர்பு கொள்ளலாம், என்றனர்.

## நீலகிரி சிறு விவசாயிகள் பயன்பெற தொடர் முயற்சி : பல்நோக்கு நீர் பயன்பாட்டு முறையில் ஆராய்ச்சி

ஊட்டி : சிறு விவசாயிகள் பயன் பெறும் நோக்கில், பல்நோக்கு நீர் பயன்பாட்டு வேளாண்மை முறை குறித்த ஆராய்ச்சி துவக்கப்பட்டுள்ளது.

ஊட்டியில் உள்ள மத்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு ஆராய்ச்சி மையம், மண் மற்றும் நீர் வளத்தை பாதுகாத்து, அவற்றை பெருக்குவதில் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு தொழில் நுட்பங்களை ஆராய்ச்சிகள் மூலம் உருவாக்கி, செயல் விளக்கம் மூலம் விரிவுபடுத்தி, அதுகுறித்த பயிற்சியை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.
மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில், தவறான நில பயன்பாடு மற்றும் நில மேலாண்மையால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பை கண்காணித்தல், மானாவரி சாகுபடிகான நீர் மேலாண்மை யுக்திகளை உருவாக்குதல் போன்றவற்றை நோக்கமாக கொண்டு செயல்படும் இம்மையம், தனது 60வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.
இதுகுறித்து, மைய முதுநிலை விஞ்ஞானியும், விழா அமைப்பு செயலருமான டாக்டர் மணிவண்ணன் கூறியதாவது:
பலதரப்பட்ட வேளாண் சூழல் கொண்ட நீலகிரி , மழை நீரின் ஓட்டம் மற்றும் மண்ணரிப்பை கணக்கிடும் மாதிரி மென் பொருளை உருவாக்கியது. இங்கு அதிகபட்ச மண்ணரிப்பை தாங்கும் வரம்புகளை கணக்கீடு செய்தது, மரங்களின் இடையே புற்களை வளர்த்து, மண் வளத்தை பாதுகாக்கும் வழிமுறை, பல அடுக்கு பயிர் சாகுபடி முறை, புதிய தேயிலை தோட்டங்களுக்கான மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு முறை ஆகியவை குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
மண்ணரிப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ள இடங்களை கண்டறிந்து, அவற்றை தடுக்கும் வழிமுறைக்கான தொழில் நுட்பங்களும் அறியப்பட்டு வருகின்றன.
இம்மையம், தற்போது, நீரின் உற்பத்தி திறனை பெருக்க பல் நோக்கு நீர் பயன்பாட்டு வேளாண்மை முறை குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது.
இதன் மூலம் சிறு விவசாயிகளுக்கு நீடித்த, நிலையான வருமானம், வாழ்வதாரம் அமைய வாய்ப்புள்ளது.
மண்ணரிப்பை தடுக்க, சணல் வலைகளை பயன்படுத்தி புற்களை வளர்ப்பதற்கான ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மையத்தின் செயல்பாடுகளில் விவசாயிகள், பொதுமக்கள் தங்களை ஈடுபடுத்தி, மண் மற்றும்

நீர் வளம் பாதுகாக்க துணை நிற்க வேண்டும். வரும் 21ம் தேதி, மையத்தின் 60வது ஆண்டு விழா மைய தலைவர் டாக்டர் கோலா தலைமையில் நடக்கிறது. இவ்வாறு, டாக்டர் மணிவண்ணன் கூறினார்.

## கோத்தகிரியில் கனமழை இடைநடவு பணிகள் துரிதம்

கோத்தகிரி : கோத்தகிரி பகுதியில் நீண்ட நாட்களுக்கு பின் மழை பெய்ததால், தேயிலை தோட்டங்களில் உரமிடுவது, இடைநடவு பணிகள் துரிதகதியில் நடந்து வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மாதம் பெய்த பருவமழை, கோத்தகிரி பகுதியில் பெய்யாத நிலையில், கோத்தகிரி நகரம் உட்பட சுற்றுவட்டார கிராமங்களில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவியது.

உரமிடுவது, தோட்டப்பராமரிப்பு போன்ற பணிகளில் தொய்வு ஏற்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு முழுவதும், கனமழை கொட்டித் தீர்த்தது.

இதனால், விவசாய நிலங்கள் ஓரளவு ஈரம் கண்டுள்ளதால், விவசாயிகள் உரமிடுவதிலும், தேயிலை தோட்டங்களில் இடைநடவு செய்வதிலும் விவசாயிகள் முனைப்புக்காட்டி வருகின்றனர்.

வானம் தொடர்ந்து மேகமூட்டத்துடன் மேலும் மழைப்பெய்ய வாய்ப்புள்ளதால், பசுந்தேயிலை மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள் ளனர்.

## சர்க்கரை விலை உயர்த்தக்கூடாது கரும்பு "வளர்ப்போர்' கோரிக்கை

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்டம் புகழூர் சர்க்கரை ஆலை கரும்பு வளர்ப்போர் நலச்சங்க கூட்டம், வேலாயுதம்பாளையம் அருகே முத்தனூரில் நடந்தது. சங்கத்தின் தலைவர் ஆடிட்டர் நல்லசாமி தலைமை வகித்தார். துணைத்தலைவர் சாமியப்பன், பொருளாளர் பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், புகழூர் ஈ.ஐ.டி., பாரி சர்க்கரை ஆலைக்கு, 2012-2013 அரவை பருவத்துக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் சர்க்கரையை

வழங்குவதாக ஆலை நிர்வாகம் உறுதி அளித்துள்ளது. ஆலை நிர்வாகத்தினர் விவசாயிகளுக்கு வழங்கும் சர்க்கரையின் விலையை, 24 ரூபாய் என, நிர்ணயம் செய்துள்ளனர்.
தற்போது நிர்ணயித்துள்ள விலையிலேயே தொடர்ந்து, இரண்டு அரவை பருவத்துக்கும் சர்க்கரை வழங்க வேண்டும். விலை உயர்வு செய்யக்கூடாது என்பது உட்பட, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில், துணை செயலாளர் செல்வம், குப்புசாமி, வேட்டமங்கலம் கூட்டுறவு வங்கித்தலைவர் தியாகராஜன், செயலாளர் கதிர்வேல் உட்பட பலர் பங்கேற்றனர்.

## எண்ணெய் பனை பயிரிடும் விவசாயிகளுக்கு மானியம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில் திட்டம் அறிமுகம்

காஞ்சிபுரம் : எண்ணெய் பனை சாகுபடியை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் பரப்பும் வகையிலான மானிய திட்டம் ஒன்றை, வேளாண் துறை அறிவித்து உள்ளது. மாவட்டத்தில், கடந்த ஆண்டு, 104 ஹெக்டேர் பரப்பளவில் எண்ணெய் வித்து பயிர் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டது. இதில், 70 ஹெக்டேரில்தான் சாகுபடி நடந்தது. அதுவும், இந்த ஆண்டு, 20 ஹெக்டேராக குறைந்து உள்ளது.எண்ணெய் பயிர் சாகுபடியை அதிகரிக்க, 50 ஹெக்டேரில் எண்ணெய் பனை பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதற்காக, வட்டாரம் தோறும் விவசாயிகளை சந்தித்து, அவர்களுக்கு எண்ணெய் பனை பயிரிடுவது குறித்து, பயிற்சி அளிக்கப்பட உள்ளது.மானிய திட்டம்இதில் பங்கேற்க விரும்பும் விவசாயிகளுக்கு, தலா 1 ஏக்கரில் எண்ணெய் பனை பயரிட, மானிய உதவி வழங்கப்படும் என, வேளாண் துறை அறிவித்து உள்ளது.

அதன் விவரம்:
செயல் மானியம் ரூபாய்
நாற்றங்கால்
செலவு 10,000

நடவு 10,000

பராமரிப்பு 6,000

ஊட்டசத்து 5,000

பம்ப்செட்

அமைப்பு 10,000

மண்புழு உரம்

தயாரிப்பு 15,000

இவ்வாறு அறிவிக்கப்பட்டு உள்ளது இது குறித்து, காஞ்சிபுரம் வேளாண் துறை துணை இயக்குனர், அய்யாதுரை கூறியதாவது:எண்ணெய் வித்து பயிர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில், அரசு சலுகைகளை வழங்கி உள்ளது. இந்த வகை பயிர்களுக்கு, களர் நிலம் ஏற்றது. வேளாண் அதிகாரிகள் அளிக்கும் தொழில்நுட்ப குறிப்புகளை முறையாக பின்பற்றினால், அதிக லாபம் பெறலாம்.இவ்வாறு, அவர் கூறினார்.

ஊடு பயிர்கள் : எண்ணெய் பனை சாகுபடி குறித்து, வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது: எண்ணெய் பனை சாகுபடியில் அதிக வருவாய் ஈட்டலாம். ஏக்கருக்கு, 148 செடிகளை இடைவெளி விட்டு, முக்கோண வடிவில் நடவு செய்ய வேண்டும். ஊடுபயிராக பயறு, மணிலா ஆகியவற்றை மூன்று ஆண்டுகள் வரை, பயிரிடலாம்.

ரூ.72,000 வருமானம் : நடவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு பின், ஏக்கருக்கு, 12 டன் வரை பழங்கள் கிடைக்கும். இவற்றை விற்பதால், 72 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கும். மாதந்தோறும், 6,000 ரூபாய் வருவாய் ஈட்ட வாய்ப்பு உள்ளது. ஊடுபயிரிலும் லாபம் கிடைக்கும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

### திடீர் மழையால் மக்கள் மகிழ்ச்சி

திண்டிவனம் : திண்டிவனத்தில் நேற்று காலை திடீரென மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திண்டிவனம் பகுதியில் கடந்த சில நாட்களாக கடும் வெயில் காய்ந்து வந்தது. பகலில் பொது மக்கள் வெளியில் வர தயக்கம் காட்டினர். விவசாயிகள் நிலங்களில் மானாவாரி மணிலா பயிர் செய்தனர். மழை பெய்யாததால் மணிலா எடுக்க முடியாமல் தவித்தனர். நேற்று காலை 10 மணியில் இருந்து 12 மணி வரை பெய்த கனமழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்

### கோமாரி தடுப்பூசி முகாம்

கண்டாச்சிபுரம் :கண்டாச்சிபுரம் அடுத்த புதுப்பாளையம்,வீரங்கிபுரம் கிராமங்களில் மழைக் கால கோமாரி தடுப்பூசி முகாம் நடந்தது. கண்டாச்சிபுரம் கால் நடை மருத்துவர் அருண் தலைமையில், சுமார் 450 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. ஊராட்சி தலைவர் சுதா வேல்முருகன் முன்னிலை வகித்தார். ஏற் பாடுகளை கால் நடைத் துறை உதவியாளர்கள் அமுதா, நதியா, பொம்மி, ராஜேந்திரன் செய்தனர்.

### தர்மபுரியில் சாமந்தி பூ விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி: சாமந்தி பூ விலை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்ட விவசாயிகள், கடந்த சில ஆண்டுகளாக மலர் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். மாவட்டம் முழுவதும், செண்டு மல்லி, சாமந்தி, சம்பங்கி, கனாகாம்பரம், மல்லிகை, பட்டன் ரோஸ், முல்லை, கோழிக்கொண்டை, அரளி உள்ளிட்ட மலர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மாலைகள் கட்டவும், பூஜை மற்றும் அலங்காரத்திற்கும் சாமந்தி பூ முக்கிய பங்கு வகிப்பதாலும், ஆண்டு முழுவதும் சாமந்தி பூவுக்கு நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் ஆர்வத்துடன் சாமந்தி பூவை சாகுபடி செய்து வருகின்றனர். சாமந்தி பூ சாகுபடிக்கு, ஒரு ஹெக்டேருக்கு தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பாக, 12 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதனால், தர்மபுரி மாவட்ட விவசாயிகள்

சாமத்தி பூ சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருவதால், சாகுபடி பரபரப்பளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தர்மபுரி, தொப்பூர், பென்னாகரம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி உள்பட மாவட்டம் முழுவதும், இரண்டாயிரம் ஹெக்டேரில் சாமந்தி பூ சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

ஐப்பசி மாதத்தில் திருமணங்கள் உள்ளிட்ட சுப காரியங்கள் மற்றும் தீபாவளி, சஷ்டி விரதம் உள்ளிட்ட பண்டிகைகளால், சாமந்தி பூவிற்கு நல்ல விலை கிடைக்கும் என்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தர்மபுரியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியது:

தர்மபுரி மாவட்டத்தில் கோ-1, கோ-2 மற்றும் மதுரை-1 ஆகிய ரகங்களை தோட்டக்கலைத்துறையினர் பரிந்துரை செய்துள்ளனர். கஸ்தூரி, சாந்தினி போன்ற வீரிய ரகங்களையும் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். வீரிய ரகத்தில் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. தற்போது மாவட்டத்தில் நிலவும் குளுமையான சீதேஷ்ண நிலை காரணமாக, சாமந்தி பூ விளைச்சல் அதிகரித்துள்ளது.

மேலும், சந்தையில் சாமந்தி பூக்களுக்கு தொடர்ந்து வரவேற்பு ஏற்பட்டுள்ளதால், ஒரு கிலோ, 50 ரூபாய் முதல், 80 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

திருமண சீசன் மற்றும் தீபாவளி ஆகிய பண்டிகையால், சந்தையில் சாமந்தி பூவின் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## அரசு முகமை அமைப்புகளிடம் உள்ளஉணவு தானிய கையிருப்பு குறைந்தது

புதுடில்லி : மத்திய, மாநில அரசுகளின் முகமை அமைப்புகளிடம் உள்ள உணவு தானியங்களின் கையிருப்பு, நடப்பு அக்டோபர் மாத துவக்கத்தில், 5.51 கோடி டன்னாக குறைந்துள்ளது.

இது, சென்ற மாதம், 5.90 கோடி டன்னாகவும், கடந்த ஆண்டு, இதே காலத்தில், 6 கோடி டன் என்ற அளவிலும் இருந்தது.இந்திய உணவு கழகம் மற்றும் மாநில அரசுகளின் முகமை அமைப்புகள், நடப்பு 2013-14ம் நிதிஆண்டிற்கு, இம்மாத

துவக்கத்தில் இருந்து நெல் கொள்முதல் செய்யத் துவங்கியுள்ளன.

தற்போது, இந்த அமைப்புகளின் கையிருப்பில், 1.90 கோடி டன் அரிசியும், 3.61 கோடி டன் கோதுமையும் உள்ளன. இது, உபரி கையிருப்பை சேர்த்து நிர்ணயிக்கப் பட்டுள்ள, 2.12 கோடி டன்னை விட, இரு மடங்கிற்கும் அதிகம்.உணவு பாதுகாப்பு சட்டத்தை செயல்படுத்த, மத்திய அரசுக்கு ஆண்டுக்கு, 6-6.10 கோடி டன்உணவு தானியம் தேவைப்படும். கரீப் பருவ நெல் மற்றும் ரபி பருவ கோதுமை ஆகியவற்றின் உற்பத்தி, சாதனை அளவாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றை கொள்முதல் செய்ய, போதுமான அளவிற்கு கிடங்கு வசதி இல்லாத நிலை உள்ளது.

முகமை அமைப்புகளிடம், 6.10 கோடி டன் உணவு தானியங்களை சேமிக்கும் அளவிற்குத் தான் கிடங்கு வசதி உள்ளது. இதில், 1.80 கோடி டன் உணவு தானியங்களை வைப்பதற்கான வெற்றிடமும் அடங்கும். இயற்கை இடர்பாடு காரணமாக, இங்கு நீண்ட காலத்திற்கு உணவு தானியங்களை இருப்பில் வைத்திருக்க முடியாது.

இதனால், மத்திய அரசு, 85 லட்சம் டன் என்ற அளவிலான உபரி கோதுமையை, வெளிச் சந்தையில் விற்க, அரசு முகமை அமைப்புகளுக்கு அனுமதி வழங்கி யுள்ளது. இத்துடன், மேலும், 20 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.இதனால், முகமை அமைப்புகளின் கிடங்குகளில் இருந்து, உணவு தானியங்களை வெளியே அனுப்பும் பணி முடுக்கி விடப்பட்டுள் ளது.

## தமிழக கறிக்கோழிக்கு "பிளாட் ரேட்" நிர்ணயம் வரத்து குறைவால் கேரளாவுக்கு வருவாய் இழப்பு

நாமக்கல் : தமிழக கறிக்கோழிகளுக்கு, கேரளாவில், "பிளாட் ரேட்" நிர்ணயிக்கப்பட்டதால், அங்கு கறிக்கோழி வரத்து குறைந்துள்ளது. இதனால், கேரள அரசுக்கு, இரண்டு விதத்தில் இழப்பு ஏற்பட்டுள்ளது.

**விலை நிர்ணயம்:**பல்லடம், தேசிய கறிக்கோழி ஒருங்கிணைப்புக் குழு, கறிக்கோழிக்கு வாரந்தோறும் விலை நிர்ணயம் செய்கிறது. அந்த விலைக்கு, வாரந்தோறும், 20 லட்சம் கிலோ கறிக்கோழிகள், கேரளாவிற்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கேரள அரசு, ஒரு கிலோ உயிருள்ள கோழியின் விலை, 95 ரூபாய் எனவும், ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சின் விலை, 45 ரூபாய் எனவும், "பிளாட்ரேட்" நிர்ணயம் செய்தது.இதற்கு, 13.5 சதவீதம் வரை வரி வசூலிக்கும் திட்டத்தை, கடந்த ஆகஸ்ட் மாதம், 29ம் தேதி முதல் அமல்படுத்தியது.இதற்கு, தமிழக கறிக்கோழி பண்ணையாளர்கள் மட்டுமின்றி, கேரள ஓட்டல் உரிமையாளர் கள் மற்றும் நுகர்வோரிடம் இருந்தும் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

ஆகஸ்ட், 29ம் தேதிக்கு முன், ஒரு கிலோ உயிர் கறிக்கோழியின் விலை, 60 ரூபாய் என்று வைத்துக் கொண்டால், அதற்கு, 13.5 சதவீதம் வரி (8.10 ரூபாய்), போக்குவரத்து செலவு, 8 ரூபாய் (ஒரு கோழிக்கு) ஆகியவற்றை சேர்த்தால், அடக்க விலை, 76.10 ரூபாய் என்ற அளவில் இருக்கும்.

தற்போது, கேரள அரசின், "பிளாட்ரேட்" திட்டப்படி, ஒருகிலோ உயிர்கறிக்கோழியின் விலை, 95 ரூபாய் என்ற அடிப்படையில், 13.5 சதவீதம் வரியாக, 12.82 ரூபாய் செலுத்த வேண்டும். இதனால், அதிகபட்சமாக கிலோவுக்கு, ஆறு ரூபாய் வரை கூடுதல் வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கூடுதல் வரியை செலுத்த விரும்பாத தமிழக பண்ணையாளர்களில் சிலர், சென்னை, பெங்களூரு, ஆந்திரா ஆகிய பகுதிகளில் கறிக்கோழியை அனுப்ப வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.இதனால், வாரந்தோறும் கேரளாவிற்கான கறிக்கோழி வரத்து, 20 லட்சம் கிலோவில் இருந்து, 10 லட்சம் கிலோவாக குறைந்தது.

**பாதிப்பு:**நாமக்கல் கறிக்கோழி உற்பத்தியாளர் சுப்ரமணியம் கூறியதாவது:கேரள

அரசின் புதிய திட்டத்தால், இரண்டு வகையில் அந்த மாநிலத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அங்கு கறிக்கோழி வரத்து, 50 சதவீதம் குறைந்துள்ளது; கூடுதல் வரிவிதிப்பால், நுகர்வோர், கிலோவுக்கு, 25 ரூபாய் வரை கூடுதல் விலை கொடுத்து கறிக்கோழி வாங்க வேண்டியுள்ளது.இப்பிரச்னைகளை கருத்தில் கொண்டு, கேரள அரசு, மீண்டும் பழைய நடைமுறையை அமல்படுத்தினால், அம்மாநில அரசும், நுகர்வோரும் பயன் பெறுவர். இவ்வாறு, அவர் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.10.2013**

## ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் இழப்பீடு கேட்டு தென்னை விவசாயிகள் சங்கம் கிராமம், கிராமமாக பிரசாரம்

வத்திராயிருப்பு,: கருகிய தென்னை மரங்களுக்கு, ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் இழப்பீடு வழங்க வலியுறுத்தி தென்னை விவசாயிகள் இரு சக்கர வாகன பிரசாரம் செய்தனர்.

வத்திராயிருப்பு மற்றும் சுற்றுப்பகுதிகளான கூமாப்பட்டி, கான்சாபுரம், நெடுங்குளம், புதுப்பட்டி, அணைக்கரைப்பட்டி, சேதுநாராயணபுரம், வண்டிப்பண்ணை அடிவாரம், மந்தித்தோப்பு, மகாராஜபுரம், தம்பிப்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் தென்னை விவசாயம் நடக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக மழை சரிவர பெய்யாததால் பல கிணறுகளில் தண்ணீர் இல்லை. ஆழ்துளைக் கிணறுகளிலும் தண்ணீர் இல்லை. இதனால், தென்னை விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது.

பருவமழை பெய்ய வேண்டிய காலத்தில் கடும் வெயில் அடிக்கிறது. தேங்காய் விலையும் நிரந்தரமற்ற நிலையில் இருக்கிறது. வத்திராயிருப்பு பகுதியில் நூற்றுக்கணக் கான தென்னை மரங்கள் வறட்சியின் காரணமாக கருகி விட்டன. மாவட்ட தென்னை விவசாயிகள் சங்கம் சார்பில், கருகிப்போயுள்ள தென்னைக்கு ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு நஷ்டஈடு தரவேண்டும் என வலியுறுத்தி இருசக்கர வாகனத்தில் கூமாப்பட்டி, நெடுங்குளம், கான்சாபுரம், புதுப்பட்டி, வத்திராயிருப்பு, சேதுநாராயணபுரம், மகாராஜபுரம், தம்பிப்பட்டி உள்ளிட்ட ஊர்களில் பிரசார இயக்கம் நடைபெற்றது.

பிரசார இயக்கத்திற்கு தென்னை விவசாய சங்க மாவட்ட செயலாளர் சிங்க ராஜ் தலைமை வகித்தார். விவசாய சங்க மாவட்ட தலைவர் குருசாமி, மாவ ட்ட துணைத் தலைவர்கள் அண்ணாமலை, காளியப்பன், மாவட்ட துணைச்செயலாளர் ஜெயபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இருசக்கர வாகன பிரசாரத்தை தமிழ் நாடு விவசாய சங்க மாநில செயலாளர் விஜயமுருகன் தொடங்கி வைத்தார்.

மாவட்ட குழு உறுப்பினர்கள் ராஜ்குமார், அப்சர் உசைன், சீனித்துரை, உள்பட ஐம்பது விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### பயிர் காப்பீடு செய்யலையா?

அருப்புக்கோட்டை,: பயிர் காப்பீடு திட்டத்தில் விவசாயிகள் சேருமாறு வேளாண்மை உதவி இயக்குனர் அறிவித்துள்ளார்.
அருப்புக்கோட்டை வட்டாரத்தில் காரீப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கு வானிலை சார்ந்த பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர அருப்புக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் மணிசேகரன் அழைப்பு விடுத்துள்ளார். மக்காச்சோளத்திற்கு ஏக்கருக்கு ரூ.200, சோளத்திற்கு ரூ.187.50, பருத்தி (மானாவாரி) பயிருக்கு ரூ.660, பாசிப்பயறு, உளுந்து (மானாவாரி) பயிருக்கு ரூ.200, நெல் பயிருக்கு ரூ.300ம் பிரிமியமாக செலுத்தவேண்டும். பிரிமியம் செலுத்த கடைசி தேதி நவம்பர் 10. காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என அறிவித்துள்ளார்.

### விலை இருக்கு... விளைச்சல் இல்லையே... கொடைக்கானலில் கேரட் விவசாயிகள் கவலை

கொடைக்கானல், : கொடைக்கானல் மலைப்பகுதியில் போதிய பருவமழை இல்லாததால் கேரட் விளைச்சல் பாதியாக குறைந்தது. இதனால் விலை உயர்ந்தும் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.
கொடைக்கானல் பகுதியில் வில்பட்டி, கோவில்பட்டி, பள்ளங்கி, அட்டுவம்பட்டி, பாலக்காட்டு ஓடை, மாட்டுபட்டி பகுதிகளில் 3 ஆயிரம் ஏக்கரில் கேரட் விவசாயம் நடக்கிறது. ஒரு ஏக்கருக்கு சுமார் 12 ஆயிரம் கிலோ கேரட் அறுவடை செய்யப்படும். கடந்தாண்டில் ஒரு ஏக்கருக்கு 12 ஆயிரம் கிலோ வரை கிடைத்தது. அப்போது கேரட் கிலோ ரூ.15க்கு மட்டுமே விற்பனையானது.
கடந்த ஓராண்டாக கொடைக்கானல் பகுதியில் பருவமழை பொய்த்தது. அதனால் கேரட் விளைச்சல் ஏக்கருக்கு 5 ஆயிரம் கிலோ மட்டுமே விளைந்துள்ளது. ஆனால் கிலோ ரூ.40க்கு விற்பனையாகிறது. விளைச்சல் குறைந்ததால் விலை அதிகரித்தும் விவசாயிகள் வேதனையில் உள்ளனர். இங்கு விளைந்த கேரட் மதுரை சென்ரல்

மார்க்கெட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.
இதுகுறித்து கொடைக்கானல் அட்டுவம்பட்டி விவசாயி சுப்ரமணி கூறுகையில், கடந்தாண்டில் கேரட் விலை ரூ.15க்கு மட்டுமே விற்பனையானது. அதனால் விவசாயிகளுக்கு செலவு தொகை கூட கிடைக்கவில்லை. நடப்பாண்டில் கிலோ ரூ.40 வரை விற்கிறது. ஆனால் விளைச்சல் பாதியாக குறைந்துள்ளது. அதனால் விவசாயிகளுக்கு லாபம் இல்லை. கடந்தாண்டு போல் நல்ல விளைச்சல் கிடைத்து கிலோ ரூ.40க்கு விற்பனையானால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்திருக்கும்' எனறார்.

## எந்த பருவத்தில் எந்த உளுந்தை பயிரிடுவது? அதிகாரிகள் ஆலோசனை

பழநி, :  உளுந்து சாகுபடியில் உள்ள தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு வேளாண்துறை சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
பழநி வட்டார விவசாயிகள், நல்ல வடிகால் வசதியுள்ள அனைத்து நிலங்களிலும் உளுந்து சாகுபடி செய்யலாம். செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் வம்பன் 2,3,4 மற்றும் ஏ.பி.கே.1 ஆகிய ரகங்களை பயிரிடலாம். ஜனவரி- பிப்ரவரி மாதங்களில் டி.எம்.வி.1 ரகத்தை பயிரிடலாம். பிப்ரவரி-மார்ச் மாதங்களில் வம்பன் 4 மற்றும் டி.எம்.வி.1 ரகத்தை பயிரிடலாம். எக்டேருக்கு 20 கிலோ விதையை 30க்கு10 செ.மீ. இடைவெளியில் விதைக்க வேண்டும். விதைகளை துத்தநாக சல்பேட் 100 பிபிஎம் கரைசலில் ஒரு கிலோ விதைக்கு ஒரு லிட்டர் கரைசல் என்ற அளவில் 3 மணிநேரம் ஊர வைத்து விதைக்க வேண்டும்.
ஊறிய விதைகளை நிழலில் ஆரம்ப ஈர நிலை வரும் உலர வைத்து ஒரு மாதம் வரை உபயோகிக்கலாம். ஒரு எக்டேருக்கு தேவையான விதையுடன் 2 பாக்கெட் ரைசோபியம் (பயறு) உயிர் உரத்தை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து 15 நிமிடம் நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்திற்குள் விதைக்க வேண்டும். ஒரு கிலோ விதைக்கு டிரைகோடெர்மாவிரிடி 4 கிராம் என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும். 2 அல்லது 3 முறை நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். எக்டருக்கு 12.5 மெட்ரிக் டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் கடைசி உழவுக்கு முன் இட்டு மண்ணுடன் கலக்க வேண்டும்.
மண் பரிசோதனை பரிந்துரைப்படி உரமிட வேண்டும். இறவை சாகுபடியாளர்கள் எக்டேருக்கு 25 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து, மானாவாரி விவசாயிகள் எக்டேருக்கு 12.5 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து இட

வேண்டும். மணிச்சத்தை ஊட்டமேற்றிய தொழு உரமாக இட வேண்டும். விதைக்கும் முன் கடைசி உழவில் பயறு நுண்ணுரம் எக்டேருக்கு 5 கிலோ இட வேண்டும். விதைத்த 30 மற்றும் 45வது நாட்களில் 2% டிஏபி கரைசல் இட வேண்டும். பூக்கள் தோன்றும் போதும், 15 நாட்கள் கழித்து மறுமுறையும், என்ஏஏ 40 பிபிஎம் கரைசல் தெளிக்க வேண்டும்.

இறவையில் எக்டேருக்கு 500 மில்லி புளுகுளோரலின் களைக்கொல்லியை 625 லிட்டர் நீரில் கலந்து விதைத்த 3ம் நாள் தெளித்து உடனடியாக நீர் பாய்ச்ச வேண்டும். பின், 25வது நாள் கைக்களை எடுக்க வேண்டும். மானாவாரி நிலங்களில் 20 மற்றும் 40வது நாளில் கைக்களை எடுக்க வேண்டும். உளுந்துக்கு மொத்தமாக 4 அல்லது 5 முறை நீர் பாய்ச்சினால் போதுமானது ஆகும். குறிப்பாக பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவங்களில் வறட்சியை தவிர்க்க வேண்டும். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கடைபிடிக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லாது பழநி தாலுகா அலுவலக வளாகத்தில் உள்ள வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாமென வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கரும்பு விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட்டம்

விழுப்புரம், : விழுப்புரம் கலெக்டர் அலுவலகத் தில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி விழுப் புரம் மாவட்ட கரும்பு விவசாயிகள் கருத்து கேட்பு கூட்டம் நடந்தது. சர்க்கரை துறை இயக்குநர் மகேசன் காசி ராஜன் தலைமை தாங்கி னார். கலெக்டர் சம்பத், இணைதலைவர் ஞானமூர்த்தி ஆகியோர் முன் னிலை வகித்தனர். கூட்டத் தில் பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மூங்கில்துறைப் பட்டு , கச்சிராயப் பாளையம் கூட்டுறவு ஆலை மற்றும் கடையநல்லூர் தரணி ஆலை, ஏ.சித்தூர் ஆரூரான் சுகர்ஸ் கரும்பு விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட் டம் நடந்தது. கரும்பு விவசாயிகளிடம் மனுக் களை பெற்ற சர்க்கரை துறை இயக்குநர் மனுக்களை பரிசீலனை செய்து தமிழக அரசுக்கும், சென்னை உயர்நீதிமன்றத்துக்கும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை கழக பொதுமேலாளர் விஜயா, இயக்குநர்கள் அன்பரசு, சிவ மலர், செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சொட்டு நீர் பாசன முறையில் மா சாகுபடி

உளுந்தூர்பேட்டை, :உளுந்தூர்பேட்டை அருகே திருநாவலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் தேசிய தோட்டக்கலை இயக்கம் மற்றும் விழுப்புரம் மாவட்ட தோட்டக் கலை துறையின் சார்பில் சொட்டு நீர் பாசன முறையில் மா அடர்வு பயிரிடும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேட்டத்தூர், மடப்பட்டு உள்ளிட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டு வரும் இந்த முறையினை விழுப்புரம் மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் ராசு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறுகையில், மா அடர்வு முறையின் மூலம் திருநாவலூர் ஒன்றியத்தில் தற் போது அதிக அளவு மாங்கன்றுகள் நடும் பணிகள் நடைபெற்று வருகிறது. 14க்கு 14 இடைவெளியில் மாங்கன்றுகள் ஒரு ஹெக்டேருக்கு சுமார் 400 கன்றுகள் வரையில் நடப்படுகிறது. தற்போது மேட்டத்தூர் கிராமத்தில் எவ் வித ரசாயன உரங்களும் போடப்படாமல் இயற்கை உரங்களில் வளர்க்கப்பட்டு வருகிறது.

இதற்காக மத்திய, மாநில அரசுகளின் சார் பில் இலவசமாக மரக்கன்றுகளும், சொட்டுநீர் பாசன உபகரணங்களும் வழங்கப்படுகிறது என்றார்.

இந்த மா அடர்வு முறையில் அல்போன்சா, நீலம், பங்கனப்பள்ளி, செந் தூரம், ருமேனியா உள் ளிட்ட 10க்கும் மேற்பட்ட ரகங்களில் மா கன்றுகள் நடப்பட்டு வளர்க்கப்படுகிறது.

ஆய்வின் போது உதவி வேளாண்மை அலுவலர் ஜோதிராமலிங்கம் உள்ளிட்ட அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## கரும்பு டன்னுக்கு ரூ4000 வழங்க வேண்டும்

கள்ளக்குறிச்சி, : கள்ளக்குறிச்சியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க சிறப்பு பேரவை கூட்டம் நடைபெற்றது. மாவட்ட துணை செய லாளர் ரகமதுல்லா தலைமை தாங்கினார். வட்டத்தலைவர் மணி வரவேற்றார். இதில் மாநில குழு உறுப்பினர் ரவீந்திரன், மாவட்ட தலைவர் ஸ்டாலின் மணி, மாவட்ட செயலாளர் சுப்ரமணி, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம் தாலுகா வட்ட நிர்வாகிகள் கலந்து கொண் டனர்.

கூட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை மாவட்டத்தில் மூன்று உள்ளது. இதற்கு ஒதுக்கப்பட்ட கரும்புகளை தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்யக்கூடாது. ஒரு டன் கரும்புக்கு ரூ.4 ஆயிரம் கொடுக்கவும், மாநில அரசின் பரிந்துரை விலையை உடனே உயர்த்தி அறிவிக்க வேண்டும். சேலம்-

உளுந்தூர்பேட்டை தேசிய நெடுஞ்சாலைக்கு நிலம், இடம் கொடுத்த விவசாயிகளுக்கு போதிய இழப்பீடு இதுவரை கொடுக்கவில்லை. எனவே மத்திய, மாநில அரசுகள் உடனே நடவடிக்கை எடுத்து இழப்பீட்டு தொகையை வழங்க வேண்டும், மாவட்டத்தில் விவசாயிகள் மின் இணைப்பு கேட்டு 58 ஆயிரம் பேர் விண்ணப்பித்து உள்ளனர். இவர்களுக்கு மின்இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### குவிண்டால் ரூ.1,400 கோதுமை ஆதரவு விலை அமைச்சரவை ஒப்புதல்

புதுடெல்லி : கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை, குவிண்டாலுக்கு ரூ.50 உயர்த்தி ரூ.1,400 ஆக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது குறித்து மத்திய உணவு துறை அமைச்சர் கே.வி.தாமஸ் கூறியதாவது: கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த, விவசாய பொருட்கள் மதிப் பீடு மற்றும் விலை கமிஷன் பரிந்துரை செய்திரு ந்தது. இது குறித்து மத்திய அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டது. இதன்படி, தற்போது கோதுமைக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலையான ரூ.1,350ல் ரூ.50 உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இது 2013,14ம் நிதியாண்டின் அறுவடைக் காலத்துக்கு பொருந்தும்.

ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ரூ.100 வீதம் உயர்த்த வேண்டும் என்று வேளாண் துறை அமைச்சகம் பரிந்துரை செய்திருந்தது. எனினும், பணவீக்கம், உணவு தானிய விலைகளை கட்டுப்படுத்த வேண்டும் என்ற கருத்தில், அமைச்சரவை இந்த முடிவை எடுத்துள்ளது. இதன்படி, குவிண்டாலுக்கு ரூ.1,400 வழங்கப்படும் என்றார்.
கோதுமை குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிப்பால் அரசின் உணவு மானியத் தொகை அடுத்த நிதியாண்டில் அதிகரிக்கும். இது பணவீக்கத்தில் விளைவை ஏற்படுத்தலாம் என்று கூறப்படுகிறது.

எக்ஸ்ட்ரா தகவல்

இந்தியாவில் கடந்த 2011,12 பயிர் ஆண்டில் கோதுமை உற்பத்தி 9.48 கோடி டன்களாகும். கடந்த 2012,13ம் பயிர் ஆண்டில் (ஜூலை , ஜூன்) கோதுமை உற்பத்தி 9.36 கோடி டன். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் கோதுமை அறுவடை துவங்கும்.

DAILY THANTHI

## இன்றைய வேளாண் செய்திகள்

## 18.10.2013

### கடலூர் மாவட்டத்தில் நவீன சாகுபடி முறைக்கு மாறி வரும் விவசாயிகள் வேளாண் உற்பத்தி அதிகரிப்பு



கடலூர்,

கடலூர் மாவட்டத்தில் நவீன சாகுபடி முறைக்கு விவசாயிகள் மாறி வருவதால் நெல், கரும்பு உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாரம்பரியமாக விவசாயத்தொழில் செய்து வரும் விவசாயிகள் கடைபிடித்து வரும் சாகுபடி முறைகளும் பாரம்பரியமானவையே. அதிலேயே அவர்கள் ஊறிப்போனதால் பாரம்பரிய சாகுபடி முறைகளில் இருந்து நவீனசாகுபடி முறைக்கு மாற்றுவது கடினம் என்றாலும் சமீபகாலமாக கடலூர் மாவட்ட விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களுக்கு மாறி வருகிறார்கள்.

நம் உணவில் பிரதான இடத்தை பிடித்துள்ள நெல் சாகுபடியில் பாரம்பரியமுறையை கைவிட்டு திருந்திய நெல்சாகுபடிக்கு மாறி வருகிறார்கள்.

இது பற்றி வேளாண்மை இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் கூறுகையில், கடலூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் ஒருலட்சத்து 13 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி நடைபெறும். இதுவரை 48 ஆயிரத்து 500 ஹெக்டேரில் சாகுபடி நடந்துள்ளது. இதில் 6 ஆயிரம் ஹெக்டேரில் திருந்திய நெல்சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக அண்ணாகிராமம் வட்டாரத்தில் 1200 ஹெக்டேரில் 900 ஹெக்டேரில் திருந்திய நெல்சாகுபடி செய்துள்ளனர். கிராமங்களையே திருந்திய நெல்சாகுபடி கிராமமாக மாற்ற உள்ளோம். கர்நாடகா மாநில வேளாண்மை அதிகாரிகள் அண்ணாகிராமம் வட்டாரத்துக்கு நேரில் வந்து திருந்திய நெல்சாகுபடி முறையை பார்த்து ஆச்சரியப்பட்டனர். ஏனெனில் திருந்திய நெல்சாகுபடி முறையில் நாற்றுக்கு நாற்று 15 சென்டிமீட்டரும், வரிசைக்கு வரிசை 25 சென்டிமீட்டரும் இடைவெளி விட்டு நாற்றுநடவு செய்யப்படுகிறது. ஒற்றை நாற்று நடவு செய்வதால் 50–60 தூர்கள் வெடிக்கின்றன. ஆனால் பாரம்பரிய முறையில் 30–40 தூர்கள் தான் வரும் இதனால் திருந்திய நெல்சாகுபடியில் நெல்மகசூல் அதிகமாக கிடைக்கும்.

வழக்கமாக நமது மாவட்டத்தில் 4.56 லட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தியாகும். இந்த ஆண்டு அதிகமான விவசாயிகள் திருந்திய நெல்சாகுபடி முறைக்கு மாறி உள்ளதால் உணவு உற்பத்தி அதிகரிக்கும் என்று நம்புகிறோம் என்றார் ராதாகிருஷ்ணன்.

நமது மாவட்டத்தின் மற்றொரு வணிகப்பயிரான கரும்பில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டம் என்றொரு புதிய சாகுபடி முறையை வேளாண்மைத்துறையினர் புகுத்தி உள்ளனர். இந்த திட்டத்தின் கீழ் கரும்பின் கணுக்களில் உள்ள பருக்களை எடுத்து குழித்தட்டு முறையில் நாற்று உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த நாற்றுகளை நடவு செய்த பின்னர், ஒரு அடி உயரம் வளர்ந்ததும் நாற்றின் நுனியை வெட்டிவிடப்படுகிறது. இதனால் நாற்றில் இருந்து அதிக தூர்கள் வெடித்து வளர்வதால் மகசூல் அதிகம் கிடைக்கிறது.

இது பற்றி துணைஇயக்குனர் இளங்கோவன்கூறுகையில், ஒற்றை நாற்று நடவு முறைக்கு ஹெக்டேருக்கு 500 கிலோ விதைக்கரும்பு போதுமானது. அந்த கரும்பிலும் கணுக்களில் இருந்த பருக்களை சீவி எடுத்த பின் கரும்பை அரவைக்கு பயன்படுத்தலாம். இதனால் கரும்பு வீணாகாது. சீவி எடுக்கப்பட்ட பருக்களில்

இருந்து கன்றுகளை குழித்தட்டு முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது. அவற்றை நாற்றுக்கு நாற்று 2 அடி, வரிசைக்கு வரிசை 2 அடி வீதம் வயலில் நட வேண்டும்.

பாரம்பரிய சாகுபடி முறையில் ஹெக்டேருக்கு 40 டன் மகசூல் கிடைக்கும், ஆனால் இந்த ஒற்றை நாற்று முறையில் ஹெக்டேருக்கு 80 டன் மகசூல் கிடைக்கும். கோவை விவசாயிகள் 100 டன் மகசூல் எடுத்துள்ளனர். அந்த விவசாயிகள் ஒன்று சேர்ந்து, 100 டன் கிளப்பை ஆரம்பித்துள்ளனர். அதேபோல் நமது விவசாயிகளும் 80 டன் கிளப் ஆரம்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம் என்றார் இளங்கோவன்.

கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு பொருள் ஆதாரத்தை தருவதில் தென்னையின் பங்கும் முக்கியமானது. தானே புயலில் ஒரு லட்சத்து

நவீன சாகுபடி முறைக்கு விவசாயிகளை மாற்றிய பெருமை வேளாண்மைத்துறை அதிகாரிகளையேச்சாரும் என்றால் மிகையாகாது.

**வேளாண் பொருட்களின் விலை விவரம்**

அரியலூர்,

அரியலூர் வேளாண் விற்பனை கூடத்திற்கு வரப் பெற்றுள்ள வேளாண் பொருட்களின் விலை விவரம் வருமாறு:-

மக்காச்சோளம் 100 கிலோ-ரூ.1,330, வேப்ப வத்தல் 50 கிலோ-ரூ.440, நிலக்கடலை 50 கிலோ-ரூ.1,767, சூரியகாந்தி 100 கிலோ-ரூ.2,759, கம்பு 100 கிலோ-ரூ.1,410, எள் 80 கிலோ-ரூ.2,569. இத்தகவலை வேளாண் விற்பனைக்கூட அதிகாரி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

**செந்துறை பகுதியில் பருவமழை பொய்த்ததால் கருகிய மானாவாரி பயிர்கள் விவசாயிகள் வேதனை**



செந்துறை,

செந்துறை பகுதியில் பருவமழை பொய்த்ததால் மானாவாரி பயிர்கள் கருகின. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

**மானாவாரி பயிர்கள்**

அரியலூர் மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான விவசாய நிலங்கள் வானம் பார்த்த பூமியாகவே உள்ளது. இங்குள்ள விவசாயிகள் பருவ மழையை நம்பியே விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக பருவமழை ஏமாற்றியதால் இப்பகுதி விவசாயிகள் மிகுந்த நஷ்டத்திற்கு ஆளானார்கள். இதனால் விவசாயிகள் தங்கள் நிலங்களை அடிமாட்டு விலைக்கு விற்று விட்டு சிமெண்ட் ஆலைகளுக்கும், சிலர் வெளியூர்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் பிழைப்பு தேடி சென்றனர். இந்நிலையில் செந்துறை பகுதியில் மீதமுள்ள சுமார் 4 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் தென் மேற்கு பருவ மழையை நம்பி ஆடிப்பட்டத்தில் மானாவாரி பயிர்களான கம்பு, சோளம், வரகு, மக்காசோளம், பருத்தி, கடலை, எள், துவரை போன்ற பயிர்களை விவசா யிகள் பயிரிட்டனர்.

**விவசாயிகள் கோரிக்கை**

இதில் சுமார் 350 ஹெக்டேர் கம்பு, 250 ஹெக்டேர் சோளம், 2,200 ஹெக்டேர் மக்கா சோளம், 700 ஹெக்டேர் நிலக் கடலை, 200 ஹெக்டேர் பருத்தி, 100 ஹெக்டேர் எள், 75 ஹெக்டேர் வரகு, 50 ஹெக்டேர் துவரை போன்ற தானியங் களை விதைத்தனர். விதைக்கும்போது பெய்த தென்மேற்கு பருவமழை பயிரான பின்பு பொய்த்து விட்டது. இதனால் பல இடங்களில் பயிர்கள் ஆரம்ப

நிலையிலேயே கருகிவிட்டன. சில இடங்களில் பலன் தரும் நிலையில் கருகின. தங்களது வாழ்வாதாரத்தை தொலைத்து கடனாளியாக ஆன விவசாயிகள் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் வேதனையுடன் உள்ளனர். எனவே தமிழக அரசு இந்த பகுதிகளில் ஆய்வு செய்து அரியலூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கோபி, கடத்தூர், டி.என்.பாளையம் பகுதிகளில் பலத்த மழையால் 150 வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 8 அடி உயர்ந்தது**



கோபிசெட்டிபாளையம்,

கோபி, கடத்தூர், டி.என்.பாளையம் பகுதிகளில் பெய்த பலத்த மழையினால் கடத்தூர் அருகே 150 வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 8 அடி உயர்ந்தது.

<u>பலத்த மழை</u>

கோபிசெட்டிபாளையம் கடந்த சில வாரங்களாக பகல் நேரத்தில் கடுமையான வெயில் நிலவி வருகிறது. ஆனால், கடந்த 2 நாட்களாக இரவு நேரத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்தநிலையில் நேற்று முன்தினம் வழக்கம்போல் காலை முதல் மாலை வரை கடுமையான வெயில் நிலவியது.

மாலை 5 மணிக்கு திடீரென்று சாரல் மழை பெய்தது. சுமார் 10 நிமிடம் பெய்த இந்த மழை பெய்தது. அதன்பிறகு, சாரல் மழை நின்று போனது. அதன்பிறகு, இரவு 9.30 மணியளவில் வானம் கருமையான மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இரவு 10 மணியளவில் மழை பெய்யத் தொடங்கியது. நேரம் செல்ல செல்ல பலத்த மழை கொட்டியது.

<u>தண்ணீர் பெருக்கெடுத்தது</u>

விடிய விடிய பெய்த பலத்த மழையினால் கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உள்பட்ட மொடச்சூர், சாமிநாதபுரம், வண்டிப்பேட்டை, மேட்டுவலவு ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகளில் தேங்கி நின்ற தண்ணீர் கீரிப்பள்ளம் ஓடையில் கலந்தது. இதனால், கீரிப்பள்ளம் ஓடையில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடி சாணார்பதி வழியாக செல்லும் தடப்பள்ளி வாய்க்காலில் கலந்தது.

கோபி பகுதிகளில் சில இடங்களில் கட்டப்பட்டு இருந்த சுற்றுச்சுவர் மழையில் இடிந்து விழுந்தன. இதேபோல் கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம், கொண்டையம்பாளையம், பங்களாப்புதூர், குண்டேரிப்பள்ளம் அணை ஆகிய பகுதிகளிலும் பலத்த மழை கொட்டித் தீர்த்தது.

<u>போக்குவரத்து பாதிப்பு</u>

கணக்கம்பாளையம் வனப்பகுதிகளில் பலத்த மழை பெய்ததால் காட்டாற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த தண்ணீர் கணக்கம்பாளையம் அருகே உள்ள வேதபாறையின் வழியாக சென்று பவானி ஆற்றில் கலந்தது. இதனால், கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக வறண்டு கிடந்த வேதபாறை ஓடையில் தண்ணீர் வரத் தொடங்கி உள்ளது.

கொண்டையம்பாளையம், புஞ்சைத்துறையம்பாளையம் பகுதிகளில் பெய்த பலத்த மழையின் காரணமாக ஓடையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதால் சத்தியமங்கலம்–அத்தாணி சாலையில் தரைப்பாலத்தை மூழ்கி தண்ணீர் சென்றன. இதனால், அந்த ரோட்டில் இரவில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

<u>8 மாதங்களுக்கு பிறகு...</u>

குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான குன்றி, விலாங்கோம்பை, மல்லியதுருவம், கெம்பனூர் ஆகிய பகுதிகளில் விடிய விடிய பலத்த மழை பெய்தது. இதனால், வனப்பகுதியில் செல்லும் காட்டாற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடி குண்டேரிப்பள்ளம் அணைக்கு வந்தடைத்தது. கடந்த 8 மாதங்களுக்கு பிறகு, குண்டேரிப்பள்ளம் அணைக்கு நேற்றுதான் தண்ணீர் வந்ததடைந்தது குறிப்பிடத்தக்கது.

அதிகாலை 5 மணி நிலவரப்படி குண்டேரிப்பள்ளம் அணைக்கு வினாடிக்கு 367 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. நேரம் செல்ல செல்ல தண்ணீர் வரத்து படிப்படியாக குறைந்தது. மதியம் 2 மணி நிலவரப்படி குண்டேரிப்பள்ளம் அணைக்கு வினாடிக்கு 332 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது.

<u>நீர்மட்டம் உயர்ந்தது</u>

வனப்பகுதியில் பெய்த பலத்த மழையின் காரணமாக குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது. நேற்று முன்தினம் மாலை 6 மணி நிலவரப்படி குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம் 21.8 அடியாக இருந்தது. மதியம் 2 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 30.1 அடியாக உயர்ந்தது.

நேற்று ஒரு நாளில் மட்டும் குணடேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம் 8.3 அடி உயர்ந்தது குறிப்பிடத்தக்கது. இதேபோல் தொடர்ந்து மழை பெய்தால் இன்னும் ஒரு வாரத்தில் குண்டேரிப்பள்ளம் அணை நிரம்பி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அணையையொட்டி மணல் மூட்டைகளை பொதுப்பணித்துறை அதிகாரிகள் தயார் நிலையில் வைத்து உள்ளனர்.

<u>வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது</u>

கடத்தூர் பகுதிகளிலும் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை விடிய விடிய பலத்த மழை பெய்தது. இதனால், கடத்தூர் அருகே உள்ள சுண்டக்காம்பாளையம் ஊராட்சிக்கு உள்பட்ட சிட்டாம்பாளையம் காலனி வழியாக செல்லும் தரைப்பாலத்தில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மேலும்,

காவிலிபாளையம், நல்லூர் ஆகிய பகுதிகளில் இருந்து மழைநீர் பெருக்கெடுத்து வந்ததால் தரைப்பாலத்தை மூழ்கடித்து தண்ணீர் சென்றது.

இதன் காரணமாக கடத்தூரில் இருந்து உக்கரம், பீளமேடு, வண்டிபாளையம், குப்பந்துறை, மில்மேடு ஆகிய பகுதிகளுக்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தரைப்பாலத்தை மூழ்கடித்து சென்ற தண்ணீர் சிட்டாம்பாளையம் காலனி பகுதிகளில் உள்ள 150–க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் புகுந்தது. இதனால், நள்ளிரவில் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வந்து பாதுகாப்பான பகுதியில் தஞ்சம் அடைந்தனர்.

தாசில்தார் பார்வையிட்டார்

மதியம் 1 மணிக்கு மேல் தரைப்பாலத்தை மூழ்கடித்துச் சென்ற தண்ணீர் மெல்ல மெல்ல வடியத் தொடங்கியது. அதைத்தொடர்ந்து உக்கரம், வண்டிபாளையம், பீளமேடு ஆகிய பகுதிகளுக்கு போக்குவரத்து தொடங்கியது. மேலும், சுண்டக்காம்பாளையம் ஊராட்சியின் சார்பில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மதிய உணவு பாதிக்கப்பட்டது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் கோபிசெட்டிபாளையம் தாசில்தார் துரை, துணை தாசில்தார் மனுநீதி மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர். பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு ஆறுதல் கூறினார்கள். ஊராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள குளம், குட்டைகள் மற்றும் நீர்நிலைகளில் வளர்ந்துள்ள புதர்களை அகற்றுமாறு ஊராட்சி நிர்வாகத்திற்கு தாசில்தார் துரை உத்தரவிட்டார்.

பதிவான மழையளவு

நேற்று முன்தினம் முதல் நேற்றுக்காலை வரை பெரும்பள்ளம் அணை பகுதியில் அதிகபட்சமாக 204 மில்லி மீட்டர் மழையளவு பதிவானது. அதைத்தொடர்ந்து, குண்டேரிப்பள்ளம் அணையில் 120.6 மில்லி மீட்டரும், பவானிசாகர் அணையில் 117 மில்லி மீட்டரும், சத்தியமங்கலத்தில் 88 மில்லி மீட்டரும், கோபிசெட்டிபாளையத்தில் 86 மில்லி மீட்டரும், கொடிவேரியில் 56 மில்லி மீட்டரும், கவுந்தப்பாடியில் 19 மில்லி மீட்டரும் மழையளவு பதிவாகி உள்ளது.

**ஓரத்துப்பாளையம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 13 அடி உயர்ந்தது**

பதிவு செய்த நாள் : Oct 18 | 01:12 am



சென்னிமலை,

கோவை, திருப்பூர் மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் ஒரத்துப்பாளையம் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. ஒரே நாளில் நீர்மட்டம் 13 அடி உயர்ந்தது.

ஓரத்துப்பாளையம் அணை

சென்னிமலை அருகே நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது ஒரத்துப்பாளையம் அணை. இந்த அணைக்கு வரும் தண்ணீரில் திருப்பூர் சாயக்கழிவுகள் அதிக அளவில் கலந்து வந்ததால் அணையில் நீர் முழுவதும் மாசுபட்டது. மேலும், அணையை சுற்றியுள்ள பகுதிகள் மட்டுமின்றி அணை நீர் சென்ற நொய்யல் ஆற்றங்கரையின் இரு புறமும் உள்ள நீர் நிலைகள், விவசாய நிலங்கள் என அனைத்தும் மாசுபட்டது.

எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகள் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். ஐகோர்ட்டு உத்தரவின் பேரில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு அணை நீர் முழுவதும் வெளியேற்றப்பட்டது. அதன் பிறகும் அணைக்கு வரும் தண்ணீரில் திருப்பூர் சாயக்கழிவுகள் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. இதனால் தண்ணீர் தேக்கி வைக்கப்படாமல் அப்படியே வெளியேற்றப்பட்டு வந்தது. இந்தநிலையில் கடந்த சில தினங்களாக கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மழை பெய்து வருவதால் ஒரத்துப்பாளையம் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது.

<u>நீர்மட்டம் உயர்ந்தது</u>

ஒரத்துப்பாளையம் அணையின் நீர்மட்டம் நேற்றுமுன்தினம் மாலை 6 மணி அளவில் 2.887 அடியே தண்ணீர் இருந்தது. அதன்பிறகு நள்ளிரவில் நீர் வரத்து அதிகரித்து நேற்று காலை 6 மணிக்கு 15.748 அடியாக உயர்ந்தது. அதாவது 12 மணி நேரத்திற்குள் 13 அடி உயர்ந்தது. அணைக்கு 1,767 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து ஒரு கதவு வழியாக 536 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணைக்கு வரும் தண்ணீர் முழுவதும் செந்நீராக காணப்படுகிறது. இது குறித்து அப்பகுதி விவசாயிகள் கூறுகையில், தற்போது அணைக்கு வரும் தண்ணீரை விவசாயத்துக்கு நன்றாக பயன்படுத்தலாம். ஆனால் ஒரு சில நாட்களில் மீண்டும் சாயக்கழிவுகள் கலந்து வந்து விடும் என கவலையுடன் தெரிவித்தனர்.

**கோவையில் பலத்த மழை**

பதிவு செய்த நாள் : Oct 18 | 03:26 am



கோவை,

கோவையில் நேற்று முன்தினம் இரவு திடீரென மழை கொட்டியது. இதுபோன்று நேற்று முன்தினம் இரவும் சுமார் 1 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

இதனால் ரோடுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. கோவை அவினாசி ரோடு மேம்பாலத்தின் கீழ் மழை நீர் தேங்கியது. இது தவிர கோவை சுற்றுவட்டார

பகுதிகளான துடியலூர், பெரியநாயக்கன்பாளையம், சூலூர் பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**காய்கறிகளை மாலையாக அணிந்து வந்து தஞ்சையில் மகளிர் சங்கத்தினர் நூதன ஆர்ப்பாட்டம் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த கோரிக்கை**

பதிவு செய்த நாள் : Oct 18 | 02:44 am



தஞ்சாவூர்,

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த கோரி காய்கறிகளை மாலையாக அணிந்து வந்து தஞ்சையில் மகளிர் சங்கத்தினர் நூதன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டம்

தஞ்சை பனகல் கட்டிடம் முன்பு வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில் நூதன முறையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவி கலைச்செல்வி தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் தமிழ்ச்செல்வி, மாவட்ட துணைத் தலைவி மாலதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் மாநில தலைவி அமிர்தம் கலந்து கொண்டு கோரிக்கைகளை விளக்கி பேசினார்.

இதில் நிர்வாகிகள் விஜயாள், அறிவுராணி, இந்துமதி, ஜானகி, மலர்க்கொடி, வசந்தா, வெண்ணிலா, பார்வதி உள்பட பலர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின்போது மேஜையின் மீது மண்எண்ணை அடுப்பு, கியாஸ்

சிலிண்டர் வைக்கப்பட்டு, அதற்கு பட்டைநாமம் போட்டு, மாலையும் அணிவிக்கப்பட்டிருந்தது.

<u>காய்கறி மாலை</u>

மேலும் சங்க நிர்வாகி ஒருவர் தக்காளி, வெண்டைக்காய், பாகற்காய், வாழைக்காய், மிளகாய் போன்ற காய்கறிகளை மாலையாக அணிந்து இருந்தார். மேலும் மிளகு, கடுகு, பூண்டு, சீரகம் ஆகியவற்றை பாக்கெட்டில் அடைத்து தோரணமாக தொங்கவிடப்பட்டிருந்தது. விதவிதமான சேலைகளையும் தோரணமாக தொங்கவிட்டு ரூ.500, ரூ.1000 என சேலைகளை கூவி விற்பனை செய்வது போல் நடித்தனர்.

கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை அதிகப்படுத்த வேண்டும். இந்திய ரூபாய் மதிப்பு வீழ்ச்சியை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். ரேசன்கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் தட்டுப்பாடு இன்றி போதுமான அளவு வழங்க வேண்டும்.

<u>தொகுப்பு வீடு</u>

பண்டிகையையொட்டி வழங்கப்படும் பொருட்களை ரேசன் கடைகளில் கூடுதலாக குறைந்த விலையில் வழங்க வேண்டும். துணிகள், பட்டாசுகள் அதிக விலைக்கு விற்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். வீட்டுமனை இல்லாத ஏழை, எளியவர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டும். குடியிருக்க வீடு இல்லாதவர்களுக்கு அரசு தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளை பாலியல் வன்கொடுமைகளில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

**கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு வசதி இல்லையென்றால் நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : Oct 18 | 01:11 am



வேலூர்,

வேலூரில் புதிதாக கட்டப்படும் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு வசதி இல்லை என்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகராட்சி அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**<u>மழை நீர்</u>**

வேலூரில் பொதுவாக மழை குறைவு. அதனால் பல பகுதிகளில் குடிநீர் பிரச்சினை எப்போதும் காணப்படுவது வழக்கம். எனவே கடந்த ஆண்டுகளில் வேலூரில் கட்டப்படும் ஒவ்வொரு வீடு மற்றும் கட்டிடங்களிலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதி இருக்க வேண்டும் என்று கண்டிப்புடன் கூறப்பட்டது. ஆனால் நாளடைவில் அந்த உத்தரவு சரியாக கடைபிடிக்கப்படவில்லை. அதே சமயம் வேலூருக்கு குடிநீர் பெறப்படும் நீர் நிலைகளிலும் தண்ணீர் இல்லை. எனவே 15 நாட்கள், 20 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வினியோகம் தற்போது நடைபெறுகிறது. குடிநீர் பிரச்சினை அதிகமாக காணப்படும் இடங்களில் லாரி, டிராக்டர் மற்றும் வாகனங்களில் குடிநீர் வினியோகம் நடைபெற்று வருகிறது.

எனவே வருங்காலங்களிலாவது புதிதாக கட்டப்படும் கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு தொட்டி கண்டிப்பாக அமைக்க வேண்டும் என்று கூறப்படுமா? என்று மாநகராட்சி கமிஷனர் ஜானகியிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:–

**<u>வீடு, வீடாக…</u>**

வேலூர் நகரில் உள்ள வீடுகள், கடைகள் மற்றும் கட்டிடங்களில் மழை நீர் சேகரிப்பு வசதி செய்யப்பட்டுள்ளதா? என்று மாநகராட்சி அலுவலர்களும் மற்றும் ஊழியர்களும் ஆய்வு செய்து வருகிறார்கள். மழைநீர் சேகரிப்பு வசதி செய்யப்பட்டிருந்தால் அந்த கட்டிடங்களில், இந்த கட்டிடத்தில் மழை நீர் சேகரிப்பு வசதி செய்யப்பட்டுள்ளது என்கிற ‘ஸ்டிக்கர்’ ஒட்டப்படுகிறது.

ஒரு வேளை அந்த கட்டிடத்தில் மழை நீர் சேகரிப்பு வசதி இல்லையென்றால் அந்த வீடு மற்றும் கட்டிட உரிமையாளர்களிடம் மழை நீர் சேகரிப்பின் அவசியம் குறித்து எடுத்துக் கூறுவதுடன், உடனடியாக மழை நீர் சேகரிப்பு வசதி செய்து கொள்ள வேண்டும் என கூறப்படுகிறது. இந்தப்பணியில் மட்டும் சுமார் 150 பேர் ஈடுபட்டுள்ளனர்.

**<u>நடவடிக்கை</u>**

புதிதாக கட்டிடம், வீடுகள் கட்ட மாநகராட்சிக்கு அனுமதிக்காக வருபவர்களிடம் மழை நீர் சேகரிப்பு வசதி செய்ய வேண்டும் என்று கூறப்படுவதுடன் அதற்காக ரூ.4 ஆயிரம் வைப்புத்தொகை பிடித்தம் செய்யப்படுகிறது. பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் மழை நீர் வசதி செய்திருந்தால் அந்த பணம் திருப்பி வழங்கப்படும்.

நீண்ட நாட்களாக மழை நீர் வசதி செய்யாத கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பை துண்டிக்கும் நடவடிக்கையும் எடுக்கப்பட உள்ளது.

**<u>டெங்கு காய்ச்சல்</u>**

வேலூரில் போதிய மழை இல்லையென்றாலும் அவ்வப்போது லேசாக மழை பெய்கிறது. அந்த மழை நீர் வீடு மற்றும் கட்டிடங்களில் தேவையில்லாமல் கிடக்கும் தேங்காய் சிரட்டை, பழைய டயர்கள் மற்றும் பொருட்களில் தேங்குவதால் அந்த நீரில் டெங்கு காய்ச்சல் புழு உற்பத்தியாகிறது. எனவே மாநகராட்சி ஊழியர்கள் வீடு, வீடாகச் சென்று மழைநீர் தேங்கி நிற்கும் இடங்களில் டெங்கு புழுவை அழிக்கும் ‘அபேட்’ கரைசலை தெளித்து வருகிறார்கள்.

அத்துடன் வீட்டிற்குள்ளும், வெளியேயும் கொசு ஒழிப்பு புகையும் அடிக்கப்பட்டு வருகிறது. எனவே அபேட் கரைசலை தெளிக்க வரும் மாநகராட்சி ஊழியர்களை வீடுகளின் உரிமையாளர்கள் வீட்டிற்குள் செல்ல அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு கமிஷனர் ஜானகி கூறினார்.

**சேலம் காய்கறி மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்ததால் தக்காளி, வெங்காயம் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : Oct 18 | 01:16 am



சேலம்,

சேலத்தில் உள்ள காய்கறி மார்க்கெட்டுகளுக்கு தக்காளி, பெரிய வெங்காயம் போன்றவை வரத்து குறைந்து உள்ளதால் விலை உயர்ந்து காணப்படுகிறது.

தக்காளி, வெங்காயம்.....

சேலம் உழவர் சந்தைகள் மற்றும் மார்க்கெட்டுகளில் தக்காளி, வெங்காயம், சின்ன வெங்காயம் போன்றவை மழை காரணமாக வரத்து குறைந்து உள்ளது. இதனால் இதன் விலை உயர்ந்து காணப்படுகிறது.

கடந்த வாரம் கிலோ ரூ.22 வரை விற்பனை செய்யப்பட்ட தக்காளி இந்த வாரம் ரூ.10 வரை உயர்ந்து ரூ.32–க்கு விற்கப்படுகிறது. விலை ஏறி கொண்டே போன பெரிய வெங்காயம் கடந்த வாரம் சற்று குறைந்து கிலோ ரூ.42–க்கு விற்கப்பட்டது.

ஆனால் தற்போது வரத்து குறைவால் ரூ.16 வரை மீண்டும் உயர்ந்து ரூ.58 வரை விற்கப்படுகிறது.

<u>ரூ.60–க்கு விற்பனை</u>

சின்ன வெங்காயமும் கிலோ ரூ.60–க்கு விற்கப்படுகிறது. கேரட் கிலோ ரூ.46–க்கும், பீன்ஸ் கிலோ ரூ.27–க்கும், முட்டைக்கோஸ் கிலோ ரூ.18–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. புதிய இஞ்சி அதிகளவு வருவதால் கிலோ ரூ.64–க்கு விற்கப்படுகிறது.

உழவர் சந்தைகள் மற்றும் மார்க்கெட்டுக்கு கத்தரிக்காய், வெண்டைக்காய் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் கத்தரிக்காய் கிலோ ரூ.15–க்கும், வெண்டைக்காய் கிலோ ரூ.12–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதே போல், மற்ற காய்கறிகளின் விலையில் ஏற்றம் இறக்கம் உள்ளது.

<u>வரத்து குறைவதால்</u>

இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறும் போது, ‘புரட்டாசி மாதம் மற்றும் ஆயுதப்பூஜை, சரஸ்வதி பூஜை போன்ற பண்டிகைகள் என வந்ததால் காய்கறிகளின் விலை உயர்ந்து காணப்பட்டது. தற்போது குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் மழை பெய்ததால் ஓசூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ராயக்கோட்டை உள்ளிட்ட பகுதியில் இருந்து வரும் தக்காளி வரத்து மார்க்கெட்டுக்கு குறைந்து உள்ளதால் விலை உயர்ந்து உள்ளது. சற்று குறைந்து வந்த பெரிய வெங்காயத்தின் விலையும் மீண்டும் உயர தொடங்கியது. மழை பெய்வதால் அறுவடை உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டு வருவதால் இந்த விலை உயர்வு ஏற்படுகிறது‘ என்று கூறுகிறார்.

**ராசிபுரத்தில் அதிகபட்சமாக 72 மி.மீட்டர் மழை பதிவு நாமக்கல்லில் பருத்தி ஏலம் ரத்து**

பதிவு செய்த நாள் : Oct 17 | 11:56 pm



நாமக்கல்,

நாமக்கல் மாவட்டத்தில் நேற்று இரவு பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக ராசிபுரம் பகுதியில் 72.2 மி.மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

நேற்று காலை 8 மணி நிலவரப்பட்டி மாவட்டம் முழுவதும் பெய்த மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:–

ராசிபுரம் – 72.2, குமாரபாளையம் – 42, சேந்தமங்கலம் – 23.4, திருச்செங்கோடு – 12, எருமப்பட்டி – 10, நாமக்கல் – 6, பரமத்திவேலூர் – 6, மங்களபுரம் – 4, புதுச்சத்திரம் – 3.

இந்த மழை காரணமாக நேற்று நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு மிக குறைவான பருத்தி மூட்டைகளே விற்பனைக்கு வந்தன. எனவே ஏலம் நடைபெறவில்லை. அங்குள்ள களத்தில் விவசாயிகள் மழையில் நனைந்த பருத்தியை உலர வைத்தபடி இருந்தனர்.